# திங்கள்

மே - ஜீன் 2014

அரசாங்க தகவல் திணைக்கள
வெளியீடு


PUPLIC LIBRARY
JAFFNA



# இலங்கை-இந்திய உறவில்

## புதியதோர் அத்தியாயம்






# சமாதானமே மனித உரிமைகளுக்கு உத்தரவாதம்

## ஹமீட் கர்சாய்



மூன்றுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைத்தந்த ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய்க்கு, ஜனாதிபதி செயலகத்தில் பிரமாண்டமான முறையில் செங்கம்பள வரவேற்பளிக்கப்பட்டது.







"பல்வேறு விடயங்களில் இரு நாட்டுக்கும் இடையில் கலாசார பாரம்பரியம், பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் நட்பு என்பன பொதுவாகக் காணப்படுகின்றன. உங்களின் இலங்கை விஜயம் இந்த உறவுகளை மேலும் நெருக்கமாக்கும்."

02 OCT 2014

# உள்ளடக்கம்

04. இலங்கை - இந்திய உறவில் புதிய அத்தியாயம் ஆரம்பம்....!!

10. அடுத்த தசாப்தம் இளைஞர் கையில்...

15. பஹ்ரைனில் ஜனாதிபதிக்கு கௌரவ பட்டம்.

19. அபிவிருத்தி தொடர்பாடல் - உள்ளடக்கமும் பரிமாணங்களும்

23. 18 வருட உலகக்கிண்ண கனவு நனவானது

28. கொழும்பு கம்பன் விழா - 2014

37. முகப்புத்தக கணக்குகளை தடை செய்வது சாத்தியமா...?

39. வயதானவர்களுக்கு ஓய்வு தேவையா?

# உள்ளும் மலரும்

## உள்நாட்டு, வெளிநாட்டு செய்திகளை சுருக்கமாகப் பிரசுரிக்கவும்

வரலாற்று முக்கியத்துவமிக்க வெளிநாட்டு நிகழ்வுகளும் தொகுப்புக்களாக திங்களில் வெளிவர வேண்டும். திங்கள் சஞ்சிகை ஓர் பதிவேடாக வரலாற்றில் பேசப்பட வேண்டும்.

நாட்டு தலைவர்களின் பதவியேற்பு, இறப்பு என வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் யாவும் முறையாக பிரசுரிக்கப்படும் பட்சத்தில், திங்களின் ஒளி எங்கும் வியாபிக்கும்.

குறித்த நிகழ்வுகள் தொடர்பாக தெளிவான புகைப்பட பக்கமாகவும் அதனை அமைக்கலாம். அது வாசகர்களுக்கு பெரிதும் பயன் தரவல்லது. அரசாங்கத்தின் அபிவிருத்திப் பணிகளை அதிகமாக பிரசுரிப்பதானது வாசகர்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும். எனவே, பல்சுவை அம்சங்கள் நிறைந்த ஓர் பூரணத்துவம் வாய்ந்த சஞ்சிகையாக திங்கள் மிளிர வேண்டும்.

**கிரிசாந்தன்**
**ஹட்டன்**

---

## உளவியல் மாற்றத்தை 'திங்கள்' ஏற்படுத்த வேண்டும்.

எந்தவொரு வாசகர் வட்டமும் குறித்ததொரு சஞ்சிகையை வாசிப்பது தமது விருப்பங்களை அடிப்படையாக வைத்தே ஆகும். எனவே வெளிவரும் சஞ்சிகைகள் வாசகர்களின் விருப்பு வெறுப்புக்களை அடையாளம் கண்டு அவற்றை நிவர்த்திக்கக் கூடிய வகையில் அமையவேண்டும். திங்கள் சஞ்சிகையானது அந்த நிலையை அடைய இன்னும் பல மாற்றங்களை செய்ய வேண்டும். குறிப்பாக க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) ஆகிய பரீட்சைகளை எதிர் நோக்க காத்துக் கொண்டிருக்கும் மாணவர்களை இலக்காகக் கொண்டும் திங்கள் தமது பக்கங்களை வடிவமைக்க வேண்டும்.

அதுபோலவே உளவியல் தொடர்பாகவும் தொடர்ந்து வரும் சஞ்சிகைகளில் கட்டுரைகள் பிரசுரிக்கப்பட வேண்டும். வாசகர்களின் எண்ணங்களை ஒழுங்குபடுத்த இது பெரிதும் உதவும் என்பது எனது அபிப்பிராயமாகும். எனினும் தற்போதைய திங்கள் சஞ்சிகையின் உள்ளீடு தொடர்பிலும் ஓரளவுக்கு திருப்திகொள்ள முடியும். சம்பிரதாய பூர்வமான கட்டுரைகளை வெளியிடுவதில் இருந்து சற்று மீண்டும் ஓர் புதிய பாதையில் திங்கள் பயணிப்பது சந்தோஷம்.

**அம்சத்வேனி**
**மட்டக்களப்பு**

## மக்கள் மத்தியில் பேசப்படும் சஞ்சிகை திங்கள்

நிகழ்கால நிகழ்வுகள், விசேட நிகழ்வுகள் என்பன தொடர்பில் திங்கள் வாசகர்களை விழிப்பூட்டி வருகின்றது. அரசியல் கட்டுரைகள் பெரும்பாலும் நாட்டின் உண்மை நிலைகளை அறியக்கூடிய சாதனமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நாங்கள் அறிந்து கொள்ள வேண்டிய பல அம்சங்கள் விபரமாக இதனுள் காணப்படுகின்றன. அரசியல், சமூக, பொருளாதார ரீதியில் மக்கள் மத்தியில் விவாதங்களை ஏற்படுத்தும் அளவிற்கு கட்டுரைகள் காரசாரமாக அமைய வேண்டும். அதனால் மக்கள் உண்மை தன்மையினை அறிய வாய்ப்பு ஏற்படும். தற்போது கூட இவ்வாறான பல கட்டுரைகள் திங்கள் சஞ்சிகையில் வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**சியாம்**
**கிண்ணியா**

---

## நான் திங்களின் தீவிர ரசிகன்

நான் திங்கள் சஞ்சிகையின் தொடர்ச்சியான வாசகராக மாறியது அதன் மூலம் நான் பெற்ற பலனாலேயாகும். நான் போட்டிப் பரீட்சை ஒன்றிற்கு தோற்றும் போது பல அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான தகவல்களை இதிலிருந்தே பெற்றுக் கொண்டேன். இது எனக்கு பெரிதும் உதவியது. முக்கியமான தகவல்கள் அடங்கிய தொகுப்பு ஒரு புறம் பிரசுரமாகும் நிலையில் பொழுது போக்குக்கு தேவையான அம்சங்கள் மறுபுறம் பிரசுரமாவது வாசகர்களின் அலுப்புத் தன்மையினை போக்கக் கூடியதாக உள்ளது.

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பில் மக்கள் மத்தியில் ஓர் சாதகமான எண்ணப்பாட்டினை உருவாக்குவதில் திங்கள் பாரியதொரு பணியை ஆற்றுகின்றது.

எனினும் திங்கள் சஞ்சிகையானது இன்றைய சூழ்நிலையில் படித்த உயர் வர்க்கத்தின் பேசுபொருளாகவே காணப்படுகின்றதே ஒழிய, பாமர மக்களின் கைகளை எட்டுவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. எதிர் வரும் காலங்களில் அக்குற்றச்சாட்டும் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

திங்கள் சஞ்சிகை பிரசுரமாகும் கால எல்லையானது மிகவும் அதிகமாகும். சரியாக மாதமொருமுறை இச்சஞ்சிகை வெளியாகும் பட்சத்தில் இதன் தாக்கம் நன்கு உணரலாம்.

**கௌசல்யா**
**வவுனியா**

# திங்கள்

## மாதாந்த சஞ்சிகை



**ஆலோசகர்கள்**

பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம்.

வசந்தப்ரிய ராமநாயக்க
தகவல் பணிப்பாளர்.

**பிரதம ஆசிரியர்**
ஏ.ஹில்மி முஹம்மத்

**இணை ஆசிரியர்**
நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்

**உதவி ஆசிரியர்கள்**
எஸ்.ஏ.எம். பவாஸ்
ஆர்.எம். நாதன்

**இணைப்பு நடவடிக்கை**
எம்.எஸ்.எம். மிஸ்வர்

**கணனி பக்க வடிவமைப்பு**
Smart Graphics

**புகைப்படக் கலைஞர்கள்**
சுதத் சில்வா
சரத் தர்மசிறி
பீ.டீ. ரஞ்சித்
எல். ரோஹன
யமுனிபிரபாத்



**முகவரி**

திங்கள் ஆசிரியர் பீடம்
அரசாங்க தகவல் திணைக்களம்
163,கிருலப்பனை வீதி,கொழும்பு 05.
தொலைபேசி: 0112512423, 0112513756
மின்னஞ்சல்: info.thingal@gmail.com




# நல்லிணக்கம்

எமது நாட்டை ஆட்கொண்டிருந்த 30 வருடகால யுத்தம் முடிவடைந்து, நாட்டின் சகல பகுதிகளிலும் சிவில் நிருவாகம் நிலை நாட்டப்பட்டுள்ளது. தெற்கைப் போலவே வடக்கிலும், மேற்கைப் போலவே கிழக்கிலுமாக நாடு முழுவதும் ஏக காலத்தில் துரித அபிவிருத்திப் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆசியாவிலேயே ஆச்சரிய மிகு நாடாகும் கனவு படிப்படியாக நனவாக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை பல்லின சமூகமொன்றை கொண்ட நாடாகும். சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் முதலான மூன்று சமூகத்தவர்கள் இங்கு வசிக்கின்றனர். இவர்கள் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் முதலான உலகின் முக்கியமான மதங்களைப் பின்பற்றுபவர்களாக அமைதியாகவும் ஐக்கியத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். தத்தமது இன, மத பேதங்களுக்கு அப்பால், நாம் எல்லோரும் இலங்கையர் என்ற வகையில் பொதுவாக செயல்பட வேண்டிய காலம் கனிந்துள்ளது.

இன்றைய சூழ்நிலையில் சமூகங்களுக்கிடையில் அங்காங்கு சில இடங்களில் முரண்பாடுகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளன.

இனங்களுக்கிடையிலான பரஸ்பர நல்லுறவை வலுப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவது அவசர அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதாவது ஒவ்வொரு சமூகத்தவரும் தத்தமது சமய, கலாசார அடிப்படையில் வாழ்வதுடன் ஏனைய சமூகத்தவருடன் சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பிரஜையும் தத்தமது கலாசாரம், பாரம்பரியங்களை பேணுவதைப் போலவே ஏனைய சமூகத்தவர்களது சமய, கலாசார விடயங்களை மதிக்கவும், விமர்சிக்காது இருப்பதற்கும் பழகிக் கொள்ள வேண்டும்.

ஊடகங்கள் எந்தவொரு சமூகத்தையும் ஆத்திரமூட்டி ஆவேசப்படுத்தும் வகையிலான செய்திகள், படங்கள், கட்டுரைகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்வது அவசியமானதாகும்.

எனவே சமூகங்களிடையே நல்லுறவை மேம்படுத்துவதற்கென அரசாங்கம் மட்டுமல்லாது சமூக, சமயத் தலைவர்கள் மற்றும் அமைப்புகள் சமூகங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் பணியை நிறைவேற்ற முன்வர வேண்டும்.

ஆ.ர்

***இலங்கை–இந்திய*** மீனவர்கள் விவகாரத்தில் இரு நாட்டு மீனவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தைகளும் அதிகாரிகளின் இணைந்த குழு சந்திப்புகளும் நிரந்தர தீர்வொன்றுக்கு வழிவகுக்கும் என்பதில் இரு நாட்டுத் தலைவர்களும் இணக்கம் கண்டுள்ளனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குமிடையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் இரு நாட்டு மீனவர்களினதும் கருத்துக்களை கவனத்திற் கொண்டு தீர்வு பெறுவது என்றும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கான விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கும் இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான இருதரப்புப் பேச்சுவார்த்தை புதுடில்லியிலுள்ள ஹைதராபாத் மாளிகையில் இடம்பெற்றது.

இதற்கு வருகை தந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு இந்தியப் பிரதமரினால் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது. இரு நாட்டுத் தலைவர்களும் இரு நாட்டுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் முக்கியமான கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

இலங்கையின் புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், மீள் அபிவிருத்தி உள்ளிட்ட துறைகளில், அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் முன்னேற்றகரமான நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், இந்தியப் பிரதமருக்குத் தெளிவுபடுத்தினார். அத்துடன், இலங்கையில் தற்போது நிலவும் ஐக்கிய, சமாதான சூழல் தொடர்பிலும் விளக்கினார்.


இரு நாட்டுத் தலைவர்களினதும் இந்த சுமுகமான சந்திப்பின் போது இலங்கை-இந்திய மீனவர் விவகாரம் தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. இரு நாட்டு மீனவர்களினதும் கருத்துக்களை கவனத்தில் கொண்டு, நெருக்கடிகளுக்கு நிரந்தரமான தீர்வொன்று பெற்றுக்கொள்வது தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. இரு தரப்பு மீனவர்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை மற்றும் அதிகாரிகள் குழுவினருக்கிடையிலான கலந்துரையாடல்களைத் தொடர்வது, இதற்கு உறுதுணையாக அமையும் என்ற விடயத்தில் இரு தலைவர்களுக்குமிடையில் இணக்கம் காணப்பட்டது.

# இலங்கை - இந்திய

## உறவில்

## புதிய அத்தியாயம் ஆரம்பம்





தமது பதவிப்பிரமாண நிகழ்வில் கலந்துக்கொள்வது தொடர்பில் இந்திய பிரதமர் மோடி இலங்கை ஜனாதிபதிக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார். இந்த நிகழ்வில் சார்க் தலைவர்கள் அனைவரும் கலந்து கொண்டமை, சார்க் நாடுகளின் நட்புறவுக்கும், எதிர்கால நடவடிக்கைகளுக்கான ஒத்துழைப்புக்கும் சிறந்த அடித்தளமாக அமையும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சார்க் பிராந்தியத்துக்கு நன்மைகளைத் தரக்கூடிய பொது விடயங்களில் முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டியது தொடர்பில் இரு தலைவர்களும் கலந்துரையாடியிருந்தனர். உலக அரங்கில் இந்த நிலைப்பாடு முதன்மைப்படுத்தப்பட்டதாகக் காணப்பட வேண்டுமென இந்தியப் பிரதமர் இதன்போது கருத்துத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் மோடி அவர்கள் தெரிவித்த இக்கருத்தை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், சார்க் நாடுகளின் சாத்தியமான செயற்பாடுகளில் இந்தியத் தலைமைத்துவம் தீர்க்கமானதொன்றாக அமையும் எனவும், சார்க் நாடுகளின் எதிர்கால நடவடிக்கைகளில் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கால்நடை வளர்ப்பு கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினர் சஜின் த வாஸ் குணவர்தன, யாழ்ப்பாண மாநகரசபை தலைவி திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரேனுக்கா செனவிரத்ன, புதுடில்லியில் உள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் ஜனாதிபதி அவர்களுடன் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர்.







### பலத்த பாதுகாப்பு

மோடி பதவியேற்பு விழாவையொட்டி, டெல்லி பொலிஸார், துணை இராணுவப் படையினர், ஆயுதம் ஏந்திய பொலிஸார் மூன்றடுக்காக பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

குடியரசுத் தலைவர் மாளிகைக்குள் உள் வலையம், அதிகாரிகள் அடங்கிய வெளிவலையம், குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வெளியில் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு பணியில் ஈடுபடும் பொலிஸார் வலையம் என மூன்றடுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

என்.எஸ்.ஜி. பாதுகாப்புப் படையினர், அதிரடி தாக்குதல் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

# இந்தியாவின் 15 ஆவது பிரதமராக மோடி பதவிப் பிரமாணம்

இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்றார். அவருக்கு குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி பதவிப் பிரமாணம் செய்துவைத்தார். அவரைத் தொடர்ந்து, மத்திய அமைச்சர்கள் பதவியேற்றனர்.

ஜனாதிபதி மாளிகைக்கு வருகைதந்த நரேந்திர மோடிக்கு, சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் எழுந்து நின்று வரவேற்பு அளித்தனர்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த விழாவில், சுமார் 4,000 சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்றனர்.


பதவி விலகும் பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, துணைத் தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் குடியரசுத் தலைவர் பிரதிபாசிங் பாட்டேல் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

மக்களவைத் தேர்தலில் பாரதிய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 334 இடங்களில் வெற்றி பெற்றதை அடுத்து இக்கூட்டணி அரசை பொறுப்பேற்றது.

### சார்க் நாட்டுத் தலைவர்கள் பங்கேற்பு

இவ்விழாவில் பங்கேற்க சார்க் நாட்டுத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டதை அடுத்து, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் அத்தோடு பூடான், நேபாள பிரதமர்கள், உள்ளிட்ட எட்டு அண்டை நாடுகளைச் சேர்ந்த தலை வர்கள் விழாவில் பங்கேற்றனர். சுமார் 4,000 பேர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நரேந்திர மோடியின் விருந்தினர்களாக அவரது தாய் ஹீராபாய் உள்ளிட்ட 20 பேர் பங்கேற்றிருந்தனர்.



உயர் கோபுரங்களில் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

25,000 பொலிஸார், துணை இராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படடிருந்தனர்.


குடியரசுதின விழா அணிவகுப்பின் போது வழங்கப்படுகின்ற பாதுகாப்பை போன்றதொரு பாதுகாப்பு இவ் விழாவிற்கும் வழங்கப்பட்டது.

குடியரசுத் தலைவர் மாளிகைக்கு மேலே விமானங்கள் பறக்க தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந்த விழாவில் முன்னாள் பிரதமர்கள் மன்மோகன் சிங், தேவகௌடா, காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, முன்னாள் மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரம், மணிசங்கர் அய்யர், முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், சார்க் அமைப்பு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டு நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை - இந்திய உறவில் புதிய அத்தியாயம் ஆரம்பம்

# அரசியல், கலை, கலாசார, வர்த்தக உறவுகளுக்கு மேலும் பலம்



இந்தியாவின் புதிய பிரதமராக நரேந்திரமோடி பதவியேற்றதன் பின்னர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான உறவுகள் மிகவும் வலுவடைந்ததுடன், இரு நாட்டு உறவுகளிலும் புதிய அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போது அரசியல், கலை, கலாசார, வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக இரு நாட்டு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். மேலும் இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான தெளிவான நிலைப்பாட்டை ஜனாதிபதி அவர்கள் இந்தியப் பிரதமருக்கு எடுத்துரைத்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு, 13ஆவது திருத்தச் சட்டம் அமுல்படுத்தல் போன்ற சகல விடயங்களும் சகல கட்சிகளையும் உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமே தீர்மானிக்கப்படும் என ஜனாதிபதி அவர்கள் தெளிவாக இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்துள்ளார்.

அத்துடன் எவரது அழுத்தங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் இதனை செய்துவிடமுடியாது. எவரும் எமக்கு உத்தரவிட முடியாது என்றும் அமைச்சர் நிமல் தெரிவித்தார்.

இந்தியா நாம் கூறுவதற்கு செவிமடுக்க முடியும். ஆனால் அவர்கள் கூறுவது போல எம்மால் செய்ய முடியாது. எனினும் இந்தியப் பிரதமர் மற்றும் எமது ஜனாதிபதிக்கும் இடையேயான சந்திப்பு மிகவும் பயனுள்ளதாக ஆரோக்கியமானதாகவே அமைந்திருந்தது.

இரு நாடுகளிலும் பலம் வாய்ந்த அரசுகள் உள்ளன. சர்வதேசத்துக்கு முன்னால் சார்க் வலய நாடுகள் ஒரே எண்ணத்திலான நிலைப்பாட்டை காண்பிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இந்தியப் பிரதமர் உள்ளார் என்றும் இந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட சஜின்வாஸ் குணவர்த்தன தெரிவித்தார். 13வது திருத்தச் சட்டம் என்பது, எம்மீது பலாத்காரமாகத் திணிக்கப்பட்ட தொன்று என்பதை அனைவரும் அறிவார்கள். இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக, ஜே.ஆர். ஜயவர்த்தனவால் இது கொண்டுவரப்பட்டது. இதனை நாம் தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகிறோம்.

ஒரு கட்டத்தில் நாம் வட மாகாண சபையை உருவாக்க மாட்டோம் என்ற பிரசாரத்தை கொண்டு சென்றார்கள். இன்று வடமாகாண சபையும் உருவாக்கப்பட்டுள்ளது.

இப்போது 13வது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்கிறார்கள். முதலில் முழுமையாக என்றால் என்ன? 13வது திருத்தச் சட்டத்தில் எதனை நடை முறைப்படுத்துவது? எதனை நீக்குவது? என்பது தொடர்பான முடிவை பாராளுமன்றமே எடுக்கும். அதற்காகவே அனைத்துக் கட்சிகளும் உள்ளடக்கிய தாக பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கப் பட்டுள்ளது.

பாராளுமன்றத்துக்கு வெளியே எங்கெங்காவது சென்று கூறித்திரிவதை விடுத்து, எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்குள் வர வேண்டும். அதற்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் இன்னமும் காலியாகவே காத்திருக்கின்றன என்றும் அமைச்சர் நிமல் தெரிவித்தார்.

இவர்களுடன் அமைச்சர் டலஸ் அழகப்பெரும, சஜின்வாஸ் குணவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.



முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்களைப்பற்றி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் இலங்கையின் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பற்றியும் தற்போதைய தேசிய நல்லிணக்க செயற்பாடுகள் பற்றியும் விபரித்தார்.


உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்காக வடக்கு கிழக்கு மாகாணங்களில் 43,000 வீடுகளை அமைக்கும் இந்திய கருத்திட்டத்தைப்பற்றி குறிப்பிட்ட முகர்ஜி ஜனாதிபதி அவர்கள், 2013ஆம் ஆண்டில் சுமார் 10,000 புதிய வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்த வருடம் இன்னும் 16,000 புதிய வீடுகளைக் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட இந்திய ஜனாதிபதி அவர்கள் 2015ஆம் ஆண்டுக்குள் கருத்திட்டம் பூர்த்திசெய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

தான் இந்தியாவில் வெளியுறவு அமைச்சராக இருந்த போது 2009ஆம் ஆண்டில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம்பற்றி முகர்ஜி ஜனாதிபதி அவர்கள் நினைவுகூர்ந்தார்.

இந்தியாவின் புதிய பிரதமர் மோடி அவர்களின் பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக புதுடில்லி சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இருதரப்பு பேச்சுவார்த்தைக்காக புதுடில்லியில் ராஸ்ட்ரபதி பவனில் இந்திய ஜனாதிபதி பிரனாப் முகர்ஜி அவர்களைச் சந்தித்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களைச் சந்திப்பதையிட்டு இந்திய ஜனாதிபதி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

இரு சனாதிபதிகளும் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம்

# இலங்கை – இந்திய
## ஜனாதிபதிகள் சந்திப்பு






ஜனாதிபதி ராஜபக்ஷ அவர்கள் புதிய பிரதமருடன் இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், கால்நடை வளர்ப்பு கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான், வெளிவிவகார அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினர் சஜின் த வாஸ் குணவர்தன, யாழ்ப்பாண மாநகரசபை தலைவி திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரெனுக்கா செனவிரத்ன புதுடில்லியில் உள்ள இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் ஜனாதிபதி அவர்களுடன் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.


**உலகமே எதிர்பாராத வகையில் இந்திய, இலங்கை மற்றும் இந்திய, பாகிஸ்தான் உறவை பலப்படுத்தி ஆயுதமற்ற ஆசியாவினை உருவாக்க பிரதமர் மோடி அவர்கள் தயாராகும் நிலைமை காணப்படுகின்றது.**





ரொபட் அன்டனி

# அடுத்த தசாப்தம்
## இளைஞர் கையில்





ஆசியாவில் முதன் முறையாக உலக இளைஞர் மாநாட்டை நடாத்திய பெருமையை இலங்கை பெற்றுக் கொண்டது. மே மாதம் 06ம் திகதி முதல் 10ம் திகதி வரை இடம்பெற்ற இம்மாநாட்டின் இறுதியில் கொழும்பு பிரகடனமும் வெளியிடப்பட்டது.

மே மாதம் 07ம் திகதி புதன் கிழமை அமர்வில் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. வியாழக்கிழமை இளைஞர்கள் எங்கே இருக்கின்றனர் என்ற அடிப்படையில் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இறுதி நாளான வெள்ளிக்கிழமை இளைஞர்கள் எதனை நோக்கி பயணிக்கவேண்டும் என்ற தொடர்பில் ஆராயப்பட்டது.


உலகின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய இளம் சமூகம் சரியான பாதையில் கொண்டு செல்லப்பட வேண்டியது அவசியமாகும் என்பது பொதுவாகவே வலியுறுத்தப்படும் விடயமாக அமைந்துள்ளது. இளைஞர், யுவதிகள் தாம் அநீதிக்கு உட்படுவதாக எண்ணும் அளவுக்கு, கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் தீர்மானம் எடுப்பவர்களின் வேலைத்திட்டங்கள் அமைந்துவிடக்கூடாது. இளைஞர், யுவதிகளை பொறுத்த மட்டில் அவர்களுக்கு கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் உரிய சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும்.



அத்துடன் சமூக மட்டத்தில் இளைஞர், யுவதிகளுக்கான சந்தர்ப்பங்கள் உறுதிபடுத்தப்பட வேண்டும். சமூகக் கட்டமைப்பை பொறுத்தவரை இளைஞர், யுவதிகளுக்கு எவ்விதமான அநீதிகளும் அநீதி ஏற்படக்கூடிய உணர்வுகளும் ஏற்பட இடமளிக்கக்கூடாது. இளைஞர், யுவதிகளின் புதிய சிந்தனைகள் தலைவர்களினால் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

இவ்வாறான தேவைகள் இன்றைய உலகில் காணப்படுகின்ற நிலையிலேயே உலக இளைஞர் மாநாடு கொழும்பில் நடைபெற்றுள்ளது. அத்துடன் உலக இளைஞர் மாநாட்டின் இறுதி வெளியீட்டு ஆவணமான கொழும்பு பிரகடனமும் வெளியிடப்பட்டது





உலக இளைஞர் மாநாடானது கடந்த நான்கு தினங்களாக நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வு அம்பாந்தோட்டையிலும் மூன்று நாட்களைக்கொண்ட அமர்வுகள் கொழும்பிலும் நடைபெற்றன. அரசாங்கத்தின் தரவுகளின் படி 164 நாடுகளின் இளைஞர் பிரதிநிதிகள் மாநாட்டின் அமர்வுகளில் கலந்து கொண்டிருந்தனர். அத்துடன் 25க்கும் மேற்பட்ட நாடுகளின் அமைச்சர்கள், உயர் மட்ட அரச அதிகாரிகள், ஐக்கிய நாடுகள் சபையின் உயர் மட்ட அதிகாரிகள் மற்றும் இலங்கையில் இருந்து 150க்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

கடந்த 3 தினங்களாக கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இளைஞர் மாநாட்டின் அமர்வுகள் நடைபெற்றன. 7 கருப்பொருள் மற்றும் 7 அடித்தளங்கள் என்ற அடிப்படையில் இளைஞர்களுக்கிடையிலான கருத்தாடல்கள் நடைபெற்றன. புதன் கிழமை அமர்வில் கடந்த கால அடைவு மட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. வியாழக்கிழமை நாம் எங்கே இருக்கின்றோம் என்ற அடிப்படையில் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இறுதி நாளான வெள்ளிக்கிழமை நாம் எங்கே போக வேண்டும் என்ற தொடர்பில் ஆராயப்பட்டது. எடுத்துக் கொள்ளப்பட்ட தலைப்புகளை பொறுத்த வரையில் வறுமை ஒழிப்பு, பால் நிலை சமத்துவம், நல்லிணக்கம், பெண்களின் நிலைமைகள், சமூக விவாகாரங்கள், பெண்களின் பங்களிப்பு, நல்லிணக்கம், சமாதானத்தை கட்டியெழுப்புவதில் இளைஞர்களின் பங்களிப்பு, சுகாதார வசதிகள், உணவு பாதுகாப்பு, அரசியல் மற்றும் பொருளாதார செயற்பாடுகள், தொழிலின்மை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இளைஞர்களுக்கிடையில் கலந்துரையாடல்கள் இடம் பெற்றுள்ளன.



குறிப்பாக கடந்த புதன்கிழமை மாலை சமாதானத்தை உணர்தல், நல்லிணக்கம், வன்முறையை முடிவுக்கு கொண்டு வருதல் என்ற தலைப்பில் வட்ட மேசை கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட ஜோன் லௌட்டன் என்ற இளைஞர் செயற்பாட்டாளர் கருத்து வெளியிடுகையில், ஸ்கொட்லாந்து என்ற குளிரான நாட்டில் இருந்து வந்து சூடான நாடு ஒன்றில் இது போன்ற மாநாட்டில் கலந்து கொள்வதில் பெருமையடைகிறேன். மோதல்களும் வன்முறைகளும் இளைஞர்களையும் பெண்களையும் கடுமையாக பாதிக்கின்றன. நல்லிணக்கம் குறித்து அதிகளவில் பேசப்பட்டாலும் மோதலை தடுப்பதே முக்கியமாகும். மோதலுக்கான நீண்டகால மற்றும் நிலைத்து நிற்க கூடிய தீர்வை காணும் நேர்மையான செயற்பாட்டில் இளைஞர்கள் கட்டாயம் பங்களிக்க வேண்டும். வன்முறைகள் கட்டாயமாக தடுக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்த வட்ட மேசை அமர்வில் பல்வேறு முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டு கருத்து வெளியிட்டனர்.

இதேவேளை இந்த மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட ஊடகவியலாளர் நாலக்க குணவர்த்தன குறிப்பிடுகையில், சரியாக ஐந்து வருடங்களுக்கு முன்னர்

இம்மாதம் இலங்கையின் நீண்ட யுத்தம் முடிவுக்கு வந்திருந்தது. இந்த சிவில் யுத்தம் நாட்டில் 25 வருடங்களாக நீடித்திருந்தது. பன்முகத்தன்மை கொண்ட தேசம் பன்முகத்தன்மை சமூகங்கள் என்ற ரீதியில் போர் நிறைவின் பெறுபேறானது எமது மக்கள் மத்தியில் பல்வேறு வித்தியாசமான உணர்வுகளை வெளிக்காட்டியிருந்தது.

சில விடயங்களிலிருந்து விடுதலை பெறும் உணர்வில் எம்மில் பலர் ஏனைய கவலைகளை பொறுப்பற்ற ரீதியில் பகிர்ந்திருந்தோம். அதேவேளை சிலர் பதிலளிக்க வேண்டியதற்குரிய கடப்பாட்டையும் உணர்ந்திருந்தார்கள் என்று குணவர்த்தன தெரிவித்தார்.

மேலும் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகள் தொடர்பில் கூறியிருந்த அவர், மோதல்களோ முரண்பாடுகளோ அல்லது ஆயுத மோதல்களோ இல்லாத நிலையை சமாதானம் என கூறிவிட முடியாது. சமாதானம் அதனை காட்டிலும் பாரியதொரு விடயமாகும். முன்னர் மோதலில் ஈடுபட்ட இரு குழுக்களின் சகவாழ்விலேயே நல்லிணக்கம் தங்கியிருக்கின்றது என நான் வலியுறுத்துகின்றேன் என்றும் நாலக்க குணவரத்தன வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் சுகாதாரமான வாழ்கையை ஊக்குவித்தல் என்ற தலைப்பில் இடம் பெற்ற வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்ட சுகாதார அமைச்சின் பணிப்பாளர் டாக்டர் மஹிபால குறிப்பிடுகையில், சுகதாரம் என்பது மிகவும் முக்கியமான விடயமாகும். மக்கள் சுகதேகியாக வாழ்வதற்கு உரிமையுடையவர்கள். எனவே இளைஞர்களின் பிரச்சினைகளை தடுப்பதற்கான பொறிமுறையை முன்வைக்க வேண்டியது அவசியமாகும் என்று குறிப்பிட்டார்.

மேலும் பல்வேறு தலைப்புக்களில் கலந்துரையாடல்களும் வட்டமேசை அமர்வுகளும் நடைபெற்றன. மாநாட்டில் கலந்துகொண்டிருந்த இளைஞர் பிரதிநிதிகள் எதிர்கால இளைஞர்களின் திட்டமிடல்கள் தொடர்பில் பல்வேறு யோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர். அத்துடன் வியாழக்கிழமை அமர்வில் இளைஞர் விவகாரத்தில் உலக நிலைமைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. அன்றைய அமர்வில் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, பாராளுமன்ற உறுப்பினர் செஹான் சேமசிங்க, உபெக்ஸா ஸ்வர்னமாலி எம்.பி, திறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர் சாந்த அபேசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால, அமைச்சர் சம்பிக்க ரணவக்க, லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தின் தலைவர் அசங்க அபேகுணசேகர உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

அத்துடன் வியாழக்கிழமை அமர்வில் நிலைபேறான அபிவிருத்தியின் முக்கியத்துவம், நல்லிணக்கத்தையும் அமைதியையும் உணர்தல், வன்முறையை முடிவுக்கு கொண்டுவருதல், உணவு பாதுகாப்பு, வறுமையை ஒழித்தல், தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவம், இளைஞர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், இளைஞர்கள் துறைசார் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள் அனைத்து விடயங்களிலும் இளைஞர், யுவதிகளை பங்கெடுக்க வைத்தல் உள்ளிட்ட பரந்துபட்ட ரீதியில் விடயங்கள் ஆராயப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன. அந்தவகையில் சனிக்கிழமை கொழும்பு பிரடகனம் வெளியிடப்பட்டது.

இந்நிலையில் அம்பாந்தோட்டையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி உரையாற்றிய போது, நாட்டின் இளைஞர்கள் சமூகம் விடயத்தில் எமது சிந்தனைகளில் மாற்றம் தேவையாகும். இளைஞர்கள் விடயம் என வரும்போது, நாம் கொள்கைகளிலும் சிந்தனையிலும் முன்னேற்றமாக செயற்படவேண்டும். இளைஞர்களுடன் ஈடுபாட்டுடன் செயற்படும்போதும் அவர்களுடன் ஆலோசிக்கும் போதும் கொள்கை உருவாக்கத்திலும் அமுல்படுத்தலிலும் சிறந்த பிரதிபலன் கிடைக்கின்றது என்று குறிப்பிட்டிருந்தார்.

மேலும் இளைஞர்கள் எப்போதும் புத்தாக்கம் உள்ளவர்களாக இருங்கள். புதியவற்றை கண்டுபிடிப்பவர்ளாக தடைகளைத் தாண்டி



செல்லுங்கள். உங்கள் பலத்தையும் திறமையையும் பயன்படுத்துங்கள்.

உலகின் அடுத்தகட்ட அபிவிருத்தியில் இளைஞர்களின் பங்களிப்பு குறித்து இந்த மாநாடு சிறந்த களம் ஒன்றை அமைக்கும் என்பது எனது நம்பிக்கையாகும். இளைஞர்களை அபிவிருத்தியில் பங்கெடுக்க வைக்கும் முதல் பொறுப்பு அரசாங்கத்தின் கைகளிலேயே உள்ளது. இந்த முயற்சி வெற்றிபெறுவதற்கும் அர்த்தமுள்ளதாகுவதற்கும் தலைவர்களாகிய நாங்கள் பல சவால்களை கவனத்திற்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த காலங்களை பொறுத்தவரை இளைஞர்கள் எதனையாவது செய்ய முயன்றால் அவர்களினால் முடியுமா? அனுபவம் உள்ளதா? என்று கேட்பார்கள். இளைஞர்கள் தங்கி வாழ்கின்றவர்கள் என்று கூறப்படும். ஆனால் அவர்களினால் சிறந்த பங்களிப்பை செய்ய முடியும் என்று குறிப்பிட்டிருந்தார்.

சமூக முன்னேற்றத்தில் இளைஞர்கள் பங்கெடுப்பதற்கு அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் அவசியம் என்பதனை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இளைஞர்கள் பங்களிப்பை உறுதிப்படுத்த எமது பாரம்பரியத்தையும் கொள்கை தீர்மானத்தையும் நாம் மீளமைக்கவேண்டும் என்பதே ஜனாதிபதியின் கருத்தாக அமைந்துள்ளது.

இந்த மாநாடு தொடர்பில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவர் லலித் பியும் பெரேரா குறிப்பிடுகையில்,

உண்மையில் இவ்வாறானதொரு பிரமாண்டமான மாநாட்டை நடத்துவதன் மூலம் நாங்கள் இலங்கையை ஒரு முக்கிய திசையை நோக்கி கொண்டு சென்றுள்ளோம். மாநாட்டில் கலந்துகொள்ளும் வெளிநாட்டு இளைஞர் பிரதிநிதிகள் எமது ஏற்பாட்டு கட்டமைப்பை கண்டு வியக்கின்றனர். கொழும்பு பிரகடனம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை அமர்வின் போது உப குழுக் கூட்டத்தை நடத்த இலங்கை முன்வந்தால் அதில் பங்கெடுப்பதாக பிரேசில் குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் மிகவும் வெற்றிகரமாக இந்த மாநாட்டை நாங்கள் நடத்துகின்றோம் என்றார்.

மேலும் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற காலைநேர அமர்வுகளுக்கு அமைச்சர் டலஸ் அழகப்பெரும தலைமை தாங்கினார். அத்துடன் மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர்கள் மட்ட பிரதிநிதிகளுடன் அமைச்சர் டலஸ் அழகப்பெரும பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

கடந்த வியாழக்கிழமை அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க குறிப்பிடுகையில்,

இளைஞர்களின் எண்ணக் கருக்களை கடந்த காலங்களில் உள்வாங்காமையும் தொடர்ச்சியாக அவற்றினை தட்டிக் கழிப்பதும் மூத்த தலைமுறையினரால் தொடர்ச்சியாக விடப்படும் தவறாகும். இளைஞர்களின் சிந்தனைகளை அடிப்படையாகக்கொண்டு சமூகங்களும் குழுக்களும் செயற்படவேண்டும்.

சமூகங்களும் குழுக்களும் செயற்படும் விதம் தொடர்பாக நாம் அனைவரும் திருப்திகொண்டுள்ளோமா? இளைஞர்களின் முன்னேற்றகரமான செயற்பாடுகளை அடுத்த ஆண்டுகளில் ஏன் பயன்படுத்த முடியாது? இளைஞர்களுக்கு எவ்வாறான திறமை இருக்கின்றதோ, அவர்கள் அவ்வழியில் செயற்படுபவதற்கு நாம் ஆதரவாக இருக்கவேண்டும். அந்த எண்ணம் உள்ளத்திலேயே தோன்றவேண்டும்.

இளைஞர்கள் அபிலாஷைகளை கொண்டவர்கள். சிறந்த கல்வி, சுகாதாரம், வீடு, தொழில்நுட்பம், வேலை வாய்ப்பு ஆகியவற்றை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். கொள்கைகள் வகுக்கப்படும்போது இளைஞர்களின் விருப்பங்களை கருத்திற்கொண்டு, பின்னர் அவற்றினை அமுல்படுத்தவேண்டும். ஒரு நாட்டின் பாதுகாவலர்களாக இளைஞர்கள் ஒரு காலத்தில் உருவாகுவார்கள் என்ற நிலையில் தமது அரசாங்கம் எவ்வாறான பாதையில் பயணிக்க வேண்டும் என்பதனை தீர்மானிக்க வேண்டிய உரிமை அவர்களுக்கு உள்ளது என்று தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க இளைஞர்கள் விடயத்தில் முக்கிய விடயம் ஒன்றை குறிப்பிட்டுள்ளார். அதாவது கொள்கைகள் வகுக்கப்படும்போது இளைஞர்களின் விருப்பங்களை கருத்திற்கொண்டு பின்னர் அவற்றினை அமுல்படுத்தவேண்டும் என்ற அவரின் கருத்து அவதானிக்கப்படவேண்டியதாகும். காரணம் இன்றைய இளைஞர்கள் கொள்கை வகுப்பில் தமது யோசனைகள் உள்ளடக்கப்படவேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். குறிப்பாக நாடு அல்லது சமூகம் ஒன்றின் எதிர்காலத்துக்காக திட்டங்களை வகுக்கும்போது, அந்த எதிர்காலம் என்ற வசனத்துக்கு உரிமையாளர்களாக உள்ள இளைஞர், யுவதிகளின் கருத்துக்களும் எண்ணக்கருக்களும் கருத்திற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

இந்நிலையில் இந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய மற்றும் யோசனைகளை முன்வைத்த அனைவரும் இளைஞர், யுவதிகள் தேசிய மட்டத்தில் தீர்மானம் எடுக்கும் வகையில் செயற்பட சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும் என்பதனை உணர்த்தியுள்ளனர். மேலும் இளைஞர்கள் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் பங்கெடுக்கவேண்டும் என்றும் அவர்களின் கருத்துக்களுக்கும் புத்தாக்க யோசனைகளுக்கும் அங்கீகாரம் வழங்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறு மாநாடுகளில் பேசுவதைத் தாண்டி இளைஞர், யுவதிகளுக்கு தேசிய மட்ட தீர்மானம் எடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட சந்தர்ப்பம் வழங்கப்படுமா என்பது சிந்திக்கவேண்டிய

விடயமாகும். அத்துடன் வெளியிடப்பட்ட கொழும்பு பிரகடனம் உரிய முறையில் நாடுகளில் இளைஞர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு உரிய முறையில் முன்னெடுக்கப்படுமா? என்பதும் அவதானம் செலுத்தப்படவேண்டிய விடயமாகும்.

இந்த மாநாட்டில் எடுக்கப்படும் தீர்மானங்களை அமுல்படுத்த அரசாங்கம் தயாராக இருக்கின்றதா? என்று இளைஞர் விவகார அமைச்சின் கண்காணிப்பு உறுப்பினரும் பிரதி கல்வி அமைச்சருமான மொகான்லால் கிரேரோவிடம் வினவிய போது அவர், அரசாங்கம் நிச்சயம் இளைஞர் மாநாட்டில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை அமுல்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது இந்தளவு நிதியை செலவிட்டு அதிகளவிலான நாடுகளை அழைத்து மாநாட்டை நடத்திவிட்டு அவற்றின் முடிவுகளை அமுல்படுத்தாவிடின் அர்த்தம் இல்லை. எனவே இதனை சிறந்த சந்தர்ப்பமாக பயன்படுத்தி அரசாங்கம் செயற்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அந்தவகையில் அரசாங்கம் கொழும்பு பிரகடனத்தை அமுல்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். இளைஞர், யுவதிகளுக்கு சிறந்த சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். குறிப்பாக கல்வி சுகாதாரம் தொழில் ஆகியவற்றில் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுத்து மற்றும் அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற முன்வர வேண்டும். இளைஞர், யுவதிகளின் எதிர்கால செயற்பாடுகளின் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளில் பங்கெடுக்கவேண்டியது அவசியமாகும்.





அம்பாந்தோட்டையில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றிய ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தலைவர் ஜோன் வில்லியம் ஏஷ் இளைஞர்களை அபிவிருத்தியில் பங்கெடுக்கவைப்பதன் அவசியத்தை சுட்டிக்காட்டினார். குறிப்பாக மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்தியபோது, அதில் இளைஞர், யுவதிகளை இணைத்துக் கொள்ள தவறிவிட்டனர் அந்த தவறை இனி விடக்கூடாது. மேலும் 10 வருடங்கள் கடந்து இளைஞர்களை பயன்படுத்த தவறிவிட்டோம் என்று வருந்தக்கூடாது என்று அவர் கூறியிருந்தார்.

அத்துடன் ஆரம்ப நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்திய ஜயத்மா விக்ரமநாயக்க என்ற இலங்கை யுவதி மண்டபத்தில் அமர்ந்திருந்த அனைவரையும்வியப்புக்குள்ளாக்கும்விதத்தில் ஒரு கருத்தை வெளியிட்டார். அதாவது இளைஞர்கள் நாளைய தலைவர்கள் அல்ல, மாறாக இன்றைய தலைவர்கள் என்றார். அவர் அவ்வாறு கூறியதும் அனைவரும் பரவசமடைந்தனர். ஐக்கிய நாடுகள் பொதுச் சபை தலைவர் தனது உரையில் இந்த விடயத்தை பிரதிபலித்தார்.

அந்தவகையில் ஆசியாவில் முதற்தடவையாக நடைபெறுகின்ற உலக இளைஞர் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ள கொழும்பு பிரகடனம் அனைவரினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. எனவே இந்த கொழும்பு பிரகடனம் அடுத்த சில வருடங்களில் இளைஞர் சமூகத்தில் எவ்வாறான தாக்கத்தையும் ஆரோக்கியமான மாற்றத்தையும் ஏற்படுத்தப் போகின்றது என்பதும், இவை எந்த அளவில் உலக நாடுகளில் அமுலாக்கம் என்ற கட்டமைப்புக்குள் வரப் போகின்றது என்பதே அடுத்து சிந்திக்கவுள்ள விடயமாக அமைந்துள்ளது.





## இரண்டு நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பஹ்ரெயினுக்குச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பஹ்ரெயின் அரசாங்கத்தின் உயர் விருதான 'கலீபா விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பஹ்ரெயின் மன்னர் ஹமாத் பின் இசா அல் கலிபா இந்த விருதை வழங்கினார்.

இரண்டாவது எலிசபெத் மகா ராணி, சவூதி அரேபிய மன்னர் உள்ளிட்ட சிலருக்கு மாத்திரமே இதுவரை இந்த உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

'நட்பு நாடுகளுடன் இலங்கை பேணிவரும் இருதரப்பு உறவுகள், அபிவிருத்திகள் மற்றும் முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து நாம் பெரு மிதம் அடைவதுடன், நாட்டை சர்வ தேச தளத்திற்கு உயர்த்த தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளும் உங்கள் முயற்சிகளை வரவேற்று இந்த விரு தை வழங்குகிறோம்' என்று பஹ்ரேன் மன்னர் தெரிவித்தார்.

அதே போன்று அச்சுற்றுப்பய ணத்தின் போது இலங்கைக்கும் பஹ் ரெயினுக்கும் இடையில் மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத் திடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள நல்லுறவுகளை மேலும் வலுப் படுத்தும் நோக்கில் விளையாட்டு, கலை மற்றும் கலாசாரம் ஆகிய துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு வழங்கும் அடிப்படையில் இந்த ஒப் பந்தங்கள் கைச்சாத்தாகின.

மேலும் கொழும்பு பல்கலைக் கழகம் மற்றும் பஹ்ரெயின் பல் கலைக்கழகம் ஆகியவற்றுக்கிடை யில் மற்றுமொரு புரிந்துணர்வு ஒப் பந்தமும் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தங்களில் இலங்கை யின் சார்பில் வெளிவிவகார அமைச் சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மற்றும் பஹ்ரெயின் சார்பில் பஹ்ரெயின் ஒலிம்பிக் குழுத் தலைவரும் இளை ஞர் மற்றும் விளையாட்டு சுப்ரீம் கவுன்சில் தலைவருமான ஷெய்க் நாசர் பின் ஹமத் அல் கலீபா ஆகி- யோரும் கைச்சாத்திட்டனர்.

"இலங்கை ஜனாதிபதி ஒருவர் பஹ்ரைன் நாட்டுக்கு விஜயம் செய்த முதலாவது சந்தர்ப்பமே இது..."



# இலங்கை-பஹ்ரைனுக்கிடையில்

## நான்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்து



இலங்கைக்கும் பஹ்ரைனுக்கு மிடையிலான நல்லுறவு மற்றும் தொடர்புகளைப் பலப்படுத்தும் வகையில் நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

விளையாட்டு, கலாசாரம் மற்றும் கலைத்துறைகளை மேம்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கொழும்பு பல்கலைக்கழகத்துக்கும் பஹ்ரைன் பல்கலைக்கழகத்துக்கு மிடையில் தொடர்புகளை வலுப்படுத்தும் ஒப்பந்தமும் இரு நாட்டு தலைவர்கள் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பஹ்ரைனுக்கான இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு பஹ்ரைன் மன்னர் ஹமாத் பின் இக்ஷா அல் - கலீபா பஹ்ரைன் அல் ஸபீர் மாளிகையில் மகத்தான வரவேற்பளித்தார். அந்நாட்டின் பிரதமர் பலிபாபின் சல்மான் பின் ஹமாட் அல்பலீக்ஷா இளவரசர் மற்றும் பஹ்ரைன் நாட்டின் உயர்மட்ட அதிகாரிகளும் இந்த வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை ஜனாதிபதி ஒருவர் பஹ்ரைனுக்கு விஜயம் செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் என்பதைக் குறிப்பிட்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள், இரண்டு நாடுகளிலும் சிறந்த நல்லுறவின் அடையாளமாக இச்சந்திப்பு நிகழ்வதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

இரு நாட்டுத் தலைவர்களுக்குமிடையிலான இரு தரப்புப் பேச்சுவார்த்தையின் போது முக்கியமான பல விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக சர்வதேச அரங்குகளில் பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படுவது தொடர்பில் இரு தலைவர்களுக்குமிடையில் இணக்கம் காணப்பட்டது.



இலங்கை ஜனாதிபதியின் தலைமைத்துவத்தைப் பாராட்டிய பஹ்ரைன் மன்னர் அவரது நேர்மை, திறமைகள் தொடர்பில் தமது தூதுக் குழுவினருக்குத் தெளிவுபடுத்தியுள்ளார். அத்துடன் பிராந்திய ஸ்திரத் தன்மைக்காக அவர் ஆற்றியுள்ள மகத்தான சேவையையும் இதன் போது பஹ்ரைன் மன்னர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிகழ்வுகளில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ரிசாட் பதியுதீன், டிலான் பெரேரா, பிரதியமைச்சர் சரத் வீரசேகர, மேல்

மாகாண சபை உறுப்பினர் நௌசர் பௌஸி, ஜனாதிபதி யின் செயலாளர் லலித் வீரதுங்க, பஹ்ரைனிலுள்ள இலங்கை தூதுவர் அநுர எம். ராஜகருணா உட்பட, இலங்கையின் முன்னணி வர்த்தகத் தூதுக்குழுவினரும் இருதரப்புப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டுள் ளனர்.

இலங்கைக்கும் பஹ்ரைனுக்குமிடையிலான உத்தி யோகபூர்வ இராஜதந்திர உறவுகள் 1992ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனையடுத்து கடந்தவருடம் பெப்ரவரி மாதம் அந்நாட்டின் தலைநகரான மனாமா வில் புதிய இலங்கை தூதரகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான அரசியல், பொரு ளாதார ரீதியான தொடர்புகள் பலம் மிக்கதாக திகழ்வ துடன் 2009ல் இலங்கைக்கு விஜயம் செய்த பஹ்ரைன் பிரதமர் வடக்கின் மீள் நிர்மாணகருத்திட்டங்களுக்காக ஒருமில்லியன் அமெரிக்கன் டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இலங்கைக்கும் - பஹ்ரைனுக்குமிடையிலான வர்த்தக கொடுக்கல் வாங்கல்கள் 2003 ம் ஆண்டில் 7.3 மில்லியன் டொலராக இருந்துள்ளதுடன் கடந்தவருடம் இத் தொகை 34.9 மில்லியன் அமெரிக்கன் டொலராக அதி கரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ■

# பஹ்ரேனின் அதியுயர் விருதான கலீபா பதக்கம்

## ஜனாதிபதி மஹிந்தவுக்கு

பஹ்ரைன் இராச்சியம் தனதுநாட்டின் உயர் கௌரவ விருதான கலீபா பதக்கத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கி கௌரவித்துள்ளது. பஹ்ரைன் மன்னர் அஹமத் பின் இசா அல் கலீபாவினால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட பஹ்ரைனின் ஹமாத் பின் இசா அல் கலீபாமன்னர் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியும் இலங்கை நாடும் இரு தரப்பு தொடர் புகள் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் என்பவற்றை மிக உயர்ந்தநிலையில் பேணுவதற்கு தனிப்பட்ட முறை யில் மேற்கொண்ட முயற்சியை பாராட்டும் முகமாக இவ் விருது வழங்கப்படுகின்றது எனத் தெரிவித்தார்.

அல் கலீபாவிருது 1940ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட் டதை அடுத்து 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அது மீண்டும் செயலூக்கப்படுத்தப்பட்டது. காலஞ் சென்ற ஹேக் இசாபின் சல்மான் அல் கலிபா எமிர் மனிதாபிமானத்தின் பொருட்டு ஆற்றிய அர்ப்பணிப் புள்ள சேவையை பாராட்டுவதற்காக இவ்விருது ஆரம் பிக்கப்பட்டது.

இதுவரை இவ் விருது சவூதி அரேபிய மன்னர், மலேசிய பிரதம அமைச்சர். இரண்டாவது எலிசபெத் மகாராணி உள்ளிட்ட தலைவர்கள் சிலருக்கு வழங்கப் பட்டிருந்தது.

விருதை ஏற்றுக்கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நான் கௌரவத்திற்கும் பாராட் டுக்கும் உள்ளாகியுள்ளேன் எனத் தெரிவித்தார்.

பஹ்ரைன் இராச்சியத்துடன் மிகவிரிவானதும் கௌர வமானதுமான கூட்டுப் பங்காண்மையை கட்டியெழுப் புவதற்கு நாம் எதிர்பார்த்திருக்கின்றோம்.




உங்களுடைய கருணைமிக்க சொற்கள், தன்னிகர் இல்லாத விருந்தோம்பல், அமோகமான செயற்பாடுகள் நிச்சயமாக செயலூக்கமுள்ள ஒத்துழைப்பாக மாறுகின்ற இந்த உத்தியோகபூர்வ விஜயம், எனக்கும் எனது தூதுக் குழுவுக்கும் என்றும் நினைவில் பதிந்திருக்கும் நினைவுச் சின்னமாக திகழும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பஹ்ரைன் இராச்சியத்தின் உயர் கௌரவ விருதான ஷேக் இசா விருது எனக்கு வழங்கப் பட்டிருப்பது ஆணவமற்ற கௌரவமாகும். குறிப் பாக இவ்விருது மனிதநேயத்திற்காக முன்னாள் ஷேக் இசாபின் சல்மான் அல் கலிபா எமிர் வாழ் நாளில் செய்த அர்ப்பணிப்பையும் அவர் பஹ்ரைன் மீதும் உலகத்தின் மீதும் கொண்டிருந்த செல்வாக் கையும் நினைவுபடுத்துகிறது.

புதிய சுயாதீன பஹ்ரைனின் அமீராக ஷேக் இசா அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு 1976 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தமை அன்று இளம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த என் மனதில் பதிந்திருக்கிறது. இந்த உயரிய தலைவரின் தொலைநோக்குகள் அறிவு நவீன பஹ்ரைனுக்கு சக்தியுள்ள அத்திவாரமாக அமைந்துள்ளதென நான் நினைக்கின்றேன் என்று தெரிவித்தார்.












கலாநிதி சி. ரகுராம்
சிரேஷ்ட விரிவுரையாளர் - தொடர்பாடல் கற்கைகள்,
தொடர்பாடல் மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம்,
திருகோணமலை வளாகம்,
கிழக்கு பல்கலைக்கழகம்.

# அபிவிருத்தி தொடர்பாடல் - உள்ளடக்கமும் பரிமாணங்களும்

# *Development Communication - Concept and Dimensions*

## அபிவிருத்தி - அறிமுகம்

அபிவிருத்தி (Development) இன்று அனைத்து தளங்களிலும் அலசப்படும் பேசு பொருளாகியிருக்கிறது. குழந்தைப் பருவத்தின் உடல், அறிவு வளர்ச்சி முதல் - சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சி வரை வெவ்வேறு தளங்களில் - தனி மனிதனிலிருந்து சமூகம், தேசம், பிராந்தியம், உலகம் வரை பல்வேறு நிலைகளிலும் அபிவிருத்தி தவிர்க்கமுடியாத கருத்தியலாகியிருக்கிறது.

இந்த வகையில்,

"தனியாளின் நலம்சார்ந்த முன்னேற்றமும், அவன் அல்லது அவளின் வாழ்க்கைத் தர உயர்ச்சியும் - அபிவிருத்தி" என வரையறை செய்யும் அதே வேளையில், சமுதாயம் சார்ந்தும், அபிவிருத்தி தொடர்பான கருத்துருவாக்கங்கள் முன்வைக்கப்படுகின்றன.

"அபிவிருத்தி எனப்படுவது, பொதுவாகச் சொல்லப்போனால் சமூக, பொருளாதார விவகாரங்களில் ஒரு மாறுபட்ட, மேம்பட்ட நிலையை அடைவதற்குச் சமுதாயத்தில் மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள மாறுதல்கள் என நிர்ணயம் செய்யலாம்" என்பது அபிவிருத்திக்கான இன்னொரு விளக்கமாகிறது.

இந்த இரண்டு நிலைப்பாடுகளையும் இணைத்தும், அபிவிருத்தியைப் பார்ப்போரும் உளர்.

தனியானதும் குழுக்களதும் வாழ்நிலைகளை முன்னேற்றக்கூடிய - சமுதாயத்தின் அரசியல், பொருளாதார, சமூக பண்பாட்டுத் தளங்களின் மாற்றங்களுக்காகத் தொடர்ந்தியங்குவதே அபிவிருத்தியாகிறது என, இந்த இரண்டு தளங்களையும் சொல்லும் அதேவேளை "அபிவிருத்தி" ஒரு நிலைப்பட்டதல்ல, மாறாக, அது இயங்கும் பொறிமுறை என்ற முக்கிய கருத்தும் இங்கு விதந்துரைக்கப்படுகிறது.

இதன் வழியாக, சமூகவியல் அடிப்படையிலும் உயிரியல் அடிப்படையிலும் அபிவிருத்தியை நோக்கும் தன்மையும் கோட்பாட்டாளர்களிடையே பிரபல்யமாயிருந்தது. "அபிவிருத்தி" என்ற மாறக்கூடிய சூழலில் அந்த அபிவிருத்திக்கு உட்படக்கூடிய காரணிகளும் அந்த மாற்றங்களை உள்வாங்கிக்கொள்வது தவிர்க்கமுடியாது எனவும், அவ்வாறின்றி மாற்றங்களுக்கு முரணாகி நிற்கும் எதுவுமே சிதைவை அல்லது அழிவைச் சந்தித்துவிடும் என்ற எச்சரிக்கையையும் விடுப்பதாக சில கோட்பாடுகள் உருவாகின.

சார்ள்ஸ் டார்வினின் (Charles Darwin) பிரபலமான "தப்பிப் பிழைக்கவல்லது உயிர் வாழும்" (The survival of the fittest) என்ற தத்துவத்தை - இந்தவகையில் - ஹேர்பெர்ட் ஸ்பென்ஸர் - மனிதப் பண்பாடுகளுக்குப் பொருத்திப் பார்த்தார். அபிவிருத்திக்கு ஏதுவான நவீன மாற்றங்களுடன் பொருந்திப் போனதாலேயே - மேற்குலகின் சமுதாயங்கள் முன்னேற்றமடையக் காரணம் என வாதாடும் அவரது கருத்து - "சமூக டார்வினிஸம்" (Social Darwinism) என்ற தனியான சிந்தனைப் புலமாகவும் பேசப்பட்டது.



உண்மையில் "அபிவிருத்தி" என்பது இயல்பானதா அல்லது வலிந்து திணிக்கப்படுவதா என்ற தார்மீகக் கேள்வியையும் இந்தக் கோட்பாடு விவாதத்திற்குக் கொண்டுவந்தது.

மனிதர்களின் இயல்பை மீறாத அல்லது அவர்களது தேவைகளுக்கு வேண்டியதாக, அதற்கு இசைவானதாக, அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடியதான மாற்றமாக "அபிவிருத்தி" இருக்கப்போகிறதா அல்லது வேறு சக்திகளின் தேவைகளின் பாலான அல்லது அச்சக்திகளின் சுய விருப்பங்களின், ஆதாயங்களின் விளைநிலமாக அபிவிருத்தி இருக்கப் போகறதா என்ற விவாதம் இன்றுவரை தொடர்கின்றது. அதன் விளைவுகளின் தொடர்ச்சியாக

உலகில் இன்று 1.2 பில்லியன் மக்கள் மிகுந்த வறுமை நிலையில், மிக மிகக் குறைவான அடிப்படை வசதிகளுடன் வாழ்ந்து வருகின்றனர் எனவும், அவ்வாறான ஏழை மக்களில் 75 சதவீதமானோர் கிராமப்புறங்களில் வாழ்கின்றனர் எனவும் உலக வங்கி கூறுகின்றது.

''அபிவிருத்தி'' தொடர்பான நவீனகால முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 75 வருடங்களுக்கும் அதிகமாகிவிட்ட நிலையில் "அபிவிருத்தி" என்பதன் அர்த்தம்தான் என்ன, அது இதுவரை சாதித்ததுதான் என்ன, இவ்வாறான "அபிவிருத்தி" மனித குலத்திற்குத் தேவையானதுதானா என்ற கேள்விகள், இவை போன்ற கசக்கும் உண்மைகளின் அடிப்படையில்தான் எழுகின்றன.

அதிகரிக்கும் வறுமை, சமத்துவமில்லாத கல்வியும் வேலைவாய்ப்புக்களும், கிடைக்கப் பெறாத வாழ்வின் அடிப்படைத் தேவைகள், பகிரப்படாத அதிகாரங்கள், சுரண்டப்படும் இயற்கை வளங்கள், மாசுபடும் சுற்றுச்சூழல் எகிறும் விலைவாசி, ஆதிக்கமயமான வர்த்தக உலகம், நலிவடையும் விவசாயம், இழிவாகும் தற்சார்பு, வலுவிழக்கும் கிராமப்புறத் தொழில்கள், புலம்பெயரும் மக்கள், துரிதமாகும் நகரமயமாக்கம், கௌரவிக்கப்படாத மனித உரிமைகள், அந்நியமாகும் பண்பாடு என "அபிவிருத்தி" சாதித்தவை இவைதானெனப் பட்டியலிட முடிகிறது.

**அபிவிருத்தி தொடர்பாடல்**

"அபிவிருத்தி தொடர்பாடல்" என்ற பதம், ஆங்கிலத்தில் தொடர்பாடல் களத்தில் புழக்கத்திலுள்ள அபிவிருத்தியையும் (Development), தொடர்பாடலையும் (Communication) இணைத்துவரும் ''Development Communilcation'' (சுருக்கமாக, DevComm அல்லது DC) என்பதிலிருந்து - அபிவிருத்திக்கான தொடர்பாடலின், இலகு பதமாக முன்வைக்கப்படுகிறது.

இந்தப் பத விளக்கத்தின் அடிப்படையில் - இரு துறைகளான அபிவிருத்தியும், தொடர்பாடலும் இணையும் புதிய துறையாக "அபிவிருத்தித் தொடர்பாடல்" கருதப்பட இடமுண்டானாலும், அபிவிருத்தியில் தொடர்பாடலின் இணைப்பு புதியதல்ல. அது, அபிவிருத்தியிடமிருந்து தனித்ததல்ல என்ற கருத்தே வலுவானதாக உள்ளது.

அபிவிருத்தித் தொடர்பாடல் என்பது, அபிவிருத்திசார் நடவடிக்கைகளில் தவிர்க்க முடியாத முக்கியத்துவத்தைப் பெற்றிருப்பதை - பல தொடர்பியலாளர்களதும், அபிவிருத்திசார் செயற்பாடுகளை முன்னெடுக்கும் அமைப்புக்களதும் - புரிந்துணர்விலிருந்தும், விளக்கங்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

"பல மில்லியன் கணக்கான மக்களின் செயற்பாடுகளால் நெய்யப்பட்டு உருவான துணி என அபிவிருத்தியை எடுத்துக் கொண்டால், அதனை இணைக்கும் முக்கியமான நூல் எனத் தொடர்பாடலைக் கொள்ளமுடியும்" என்கின்றனர் கொலின் ஃப்ரேசர் மற்றும் ஜோனாதன் விலேட் (Colin Fraser and Jonathan Villet).

''If development can be seen as a fabric woven out of the activities of millions of people, communication represents the essential thread that binds those together''

"தொடர்பாடல் அபிவிருத்தியின் தூண் போன்றது. அது உபரியல்ல. சமூக பொருளாதார ஆய்வு போல் அதுவும் முக்கியமானது."

'Development Communication is the application of the processes of communication to the development processes.'

என்ற உலக வங்கிப் பணிப்பாளர் போல் மிற்செல்லின் (Paul Mitchell) வரைவிலக்கணம் வழியாக - அபிவிருத்தியுடன் தொடர்பாடலின் வலுவான இணைப்பையும், அவ்வாறான களமொன்றில் தொடர்பாடல் குறித்த புதிய ஆய்வுப் போக்கின் தேவையையும் சொல்கிறது.

"போல் மிற்செல்லின் விளக்கத்தைப் போன்று அபிவிருத்தித் தொடர்பாடல், அபிவிருத்தியினின்றும் தனித்து நோக்கப்பட வேண்டியதல்ல. அபிவிருத்தி தொடர்பாடல் என்பது, மேலதிகமாக எத்தகைய செலவீனமும் செய்யப்படாது எந்தவொரு அபிவிருத்தியினதும் விளைவுகளை பல்கிப்பெருகச்செய்யும் வழிமுறை" என்கிறார் மின்ஹால் அன்வர் (Minhaz Anwer).

உண்மையில் - அபிவிருத்தி பற்றிய புதிய அணுகுமுறை, தொடர்பாடல் உத்திகளிலும் கணிசமான தாக்கங்களை ஏற்படுத்தவே செய்கிறது. இது, தொடர்பாடலை தனியொரு செயற்பாடாகக் கருதிய காலங்கடந்து, அதன் அனைத்துப் பரிமாணங்களையும் ஆய்விற்குட்படுத்த வேண்டிய சமூக இயங்குமுறையாக - பொருத்தமான, பரந்த சமூகத் தளத்தில் வைத்து தொடர்பாடலை நோக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ளவே வேண்டும்.

"அபிவிருத்திப் பாதைகளில் - சுயாதீனமான, போதுமான தகவல்கள் மட்டுமே இலக்காக இருப்பதில்லை. எதிர்பார்க்கப்படும் சமூக

PUPLIC LIBRARY
JAFFNA

மாற்றத்தைக் கொண்டுவருவதும் அங்கு முக்கியமாகிறது. போதுமான, வலுவான தொடர்பாடல் இல்லாதபட்சத்தில் - பொருளாதாரமும் சமூக அபிவிருத்தியும் தவிர்க்கமுடியாமல் பின்னோக்கிச் செல்வதோடு, மாறான விளைவுகளையும் உருவாக்கிவிடும். போதுமான, வலுவான தொடர்பாடல் இருக்கும்பட்சத்தில், மாற்றத்துக்கான பாதைகள் இலகுவானதாகவும் சுருக்கமானதாகவும் அமைந்துவிடும்." எனும் தொடர்பியலாளர் வில்பர்ஷ்ராமின் கருத்தும்

தொடர்பாடலின் புதிய நோக்குகளைச் சுட்டும் அதேவேளை, பலவீனமான தொடர்பாடலினதும் பலமான தொடர்பாடலினதும் பலாபலன்களையும் காட்டிச் செல்கிறது.

அபிவிருத்தித் தொடர்பாடலின் இலக்கு - அபிவிருத்தித் திட்டங்களுக்கென மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல, அதற்கெனத் தனியான, நியாயபூர்வமான சமூகப் பங்காற்றுகையும் உண்டு என்பதை இந்தியத் தொடர்பியலாளரான தீபக் டே (Dipak De) வலியுறுத்துகிறார்.

"அபிவிருத்தித் தொடர்பாடல் என்பது - கல்வியூட்டுதல் வழியே மனித முன்னேற்றத்தை வளப்படுத்தக்கூடியதும், வறுமை, வேலையற்ற நிலை, சமூக ஏற்றத்தாழ்வு ஆகியவற்றை இழிவாக்க உதவக்கூடியதுமான - தனக்கென இலக்கை வரித்துக்கொண்ட தொடர்பாடலாகவே அடிப்படையில் அமைகிறது" என்பது அவர் முன்வைக்கும் வரைவிலக்கணம்.

இதனையொட்டியே - அலி இசட். ஏல்காப்ரி (Ali Z. Elgabri) போன்ற பிற்காலக் கோட்பாட்டாளர்களின் - தொடர்பாடல் வழியான கல்வியே, சமூக - பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானது, அடிப்படையானது என்ற கருத்துமுள்ளது.

இது இவ்வாறிருக்க - அபிவிருத்தி என்பது மக்களை ஒரு கட்டத்திலிருந்து மறு கட்டத்திற்கு நகர்த்தும் நவீனமயமாக்கம் என்பதை ஏற்றுக்கொண்டு, அதற்கான தொடர்பாடலாக, அபிவிருத்தித் தொடர்பாடலை அர்த்தப்படுத்த முனைவோரும் உளர்.

"அபிவிருத்தித் தொடர்பாடல் என்பது, இருக்கும் நிலையிலிருந்து அடுத்த கட்டத்துக்கான அபிவிருத்தித் தொடர்பாடலைப் பயன்படுத்துவதே"

Development Communication is the use of Communication for the further development'

என்ற அரவிந்த் சிங்ஹால், எவரெட் எம். ரோஜர்ஸ் (Arvind Singhal and Everett M. Rogers) ஆகியோரின் விளக்கமும் இத்தகையதே.

தொடர்பாடலென்பது ஒருவழிப் பாதையல்ல. அது, மக்களிடையே சிந்தனைப் பகிர்வையும், கருத்தாடலையும் தோற்றுவிக்க வேண்டும். அங்கு, மக்கள் தமக்கான அபிவிருத்திப்போக்கைத்தாமே கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கைவசமாக்குவார்கள் என - தகவற் பகிர்வின் ஜனநாயகத்தையும், "உண்மையான அபிவிருத்தி" க்கு உதவும் தொடர்பாடலையும் அடையாளங் காட்டுகிறது. ஐக்கிய நாடுகள் அவையின் - உணவு, விவசாயத்துக்கான அமைப்பின் (FAO – Food and Agriculture Organization of the United Nations), அபிவிருத்தித் தொடர்பாடலுக்கான வரைவிலக்கணம்.

"அபிவிருத்திக்கான தொடர்பாடலென்பது - தொடர்பாடல் உத்திகள், செயற்பாடுகள், ஊடகங்கள் துணையுடன் - மாற்றத்தின் அனுபவத்தை மக்கள் பெறவும், அவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய தீர்மானங்களை வழிநடத்தக்கூடியதாக அதிகாரத்தை சுவீகரித்துக் கொள்ளவும் முடிவதே. சமூகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் பொது விஷயத்துக்கான உச்சபட்ச ஈடுபாட்டை நோக்கி மக்களை நகர்த்திச் செல்லும், பொருத்தமான, நீடித்த அபிவிருத்திக்கு, இதுவே அடிப்படைத் தேவையுமாகும்" என்கிறது ஐக்கிய நாடுகள் அவையின் - உணவு, விவசாயத்துக்கான அமைப்பு.

சர்வதேச தொடர்பாடல் பிரச்சினைகளைப் பற்றி ஆராய்ந்த மக் ப்ரைட் குழு, "தொடர்பாடலின் அனைத்துக் கட்டங்களிலும் - அது, சர்வதேச மட்டமாக இருந்தாலென்ன, தேசிய - உள்ளூர் - தனியாள் மட்டங்களாக இருந்தாலென்ன - அங்கெல்லாம், ஜனநாயகப்படுத்துதல் இருக்க வேண்டும்" என்ற உறுதிப்பாட்டை வலியுறுத்துவதும் - இங்கு, ஜனநாயகப்படுத்துதல் என்பது, அனைவருக்கும் பரவலாக்கப்பட்ட தொடர்பாடல் அதிகாரங்களைக்குறித்து நிற்பதும் கவனிக்கத்தக்கது.

'We suggest that approach (the right to communicate) promises to advance the democratization of communication in all levels – international, national, local, individual.'


### அபிவிருத்தித் தொடர்பாடலின் முன்னோடிகள்

அபிவிருத்தித் தொடர்பாடல் (Development Commincation) என்ற பதத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியதுடன், வளர்ச்சித் தொடர்பாடலை ஒரு கற்கைநெறியாக உருவாக்கியவராகவும் - பிலிப்பைன்ஸ் பேராசிரியை நோரா குப்ரால் (Nora Quebral) கருதப்படுகிறார்.

மேற்கத்தேய தொடர்பாடல் விற்பன்னர்கள் "அபிவிருத்தித் தொடர்பாடலின் தந்தை" (Father of Development Communication) என எவரெட் ரோஜர்ஸ் (Everett Rogers) கூறப்பட்டாலும், நோராவின் முக்கியத்துவம் போற்றப்படும் அதேவேளை, ஒரு பெண்ணாக அவர் இந்தத் துறையில் ஒரு மாபெரும் முன்னோடியாகக் கருதப்படுவது - அபிவிருத்தித் தொடர்பாடலின் உண்மையான நோக்கத்திற்கு அவர் வழியே கிடைத்த பெருமையாகவே கொள்ளமுடியும்.

இந்த வகையில், பாலினம்சார் தொடர்பாடலின் (Gendered Communication) உறுதிப்பாட்டிற்குக் கிடைத்த முன்னோடி உதாரணமாகவும் நோராவைப் போற்ற முடியும்.

ரோஜர்ஸ், வில்பர் ஷ்ராம் (Wilbur Schramm), டானியல் லேர்னர் (Daniel Lerner)




ஆகிய தொடர்பாடல் விற்பன்னர்கள் அளித்த பங்களிப்பு காலத்துக்குக் காலம் அபிவிருத்தித் தொடர்பாடலின் முக்கிய கட்டங்களைத் தொடவைத்தாலும், நோராவின் கருத்தியலே - தற்காலத்தின் அபிவிருத்தித் தொடர்பாடலுக்கு ஒரு திசைகாட்டியாக அமைந்தது.

ஐரோப்பாவை மையமாகக் கொண்டிருந்த (Euro – centrism) நவீன தொடர்பாடல் சிந்தனைகளை - கீழைத்தேச நாடுகளிலிருந்தும் வழிப்படுத்தமுடியும் என்பதற்கு நோராவின் பங்களிப்பு ஒரு சான்று.

"ஒரு நாடும் அதன் மக்களும் வறுமை நிலையிலிருந்து, வலுவான சமூக சமத்துவத்தையும், சாத்தியமாகக் கூடிய மனித தேவைகளின் முழுமையான பூர்த்தியாதலையும் தரக் கூடிய ஆற்றல் வாய்ந்த பொருளாதார வளர்ச்சி நிலையை வேகமாக எய்தக் கூடியவகையிலான - மனித தொடர்பாடலின் கலையும் விஞ்ஞானமுமே அபிவிருத்தித் தொடர்பாடல்" என வெகு யதார்த்தமுடனும், உலகியல் நோக்குடனும் - வளரும் பொருளாதார பலத்தை சமூக சமத்துவத்திற்கும் மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கும் அபிவிருத்தித் தொடர்பாடலைப் பயன்படுத்தும் நுட்பமான உத்தியை (People-centric Approach) முன்வைக்கின்றார் நோரா.

(தொடரும்...)



# T20 18 வருட கனவு நனவாகியது

எத்தனை ஆண்டுகள் காத்திருந்தோம் இப்படி ஒரு வெற்றிக்கான வாய்ப்பை பெறுவதற்காக... எத்தனை இறுதிப்போட்டிகளில் தோல்வியுற்று கவலையுடன் நாடு திரும்பி இருப்போம். தொடர்ந்து வந்த நாட்களைக் கழித்து முடங்கியிருப்போம்?

ஒவ்வொரு தரமும் இதோ ஒரு கிண்ணம், அதிலும் ICC கிண்ணம் எமக்குத் தான் என்று நினைத்திருக்க, வெல்கிறோம் என்று பாதிவேளை நினைத்திருக்க, கையை விட்டுக் கிண்ணம் போக வெறுங்கையுடன் வந்திருப்போம்...

இப்படி ஏங்கிக்கொண்டிருந்த இலங்கை ரசிகர்களுக்கு கொண்டாட்டம் மிகுந்த வெற்றி, தொடர்ச்சியான மகிழ்ச்சியை இன்னும் தந்துகொண்டே இருக்கிறது. திசர பெரேராவின் சிக்ஸர் மூலம் கிடைத்த வெற்றியானது, உலகம் முழுவதும் வாழும் இலங்கை கிரிக்கெட் ரசிகர்கள் 18 ஆண்டுகள் வழங்கிய ஆதரவுக்கு பிறகு கிடைத்த மகிழ்ச்சியேயாகும்.

இலங்கை கிரிக்கெட்டின் இரு பெரும் சிகரங்கள் தமது இறுதி T20 சர்வதேசத் தொடராக இத்தொடரை அறிவித்த பிறகு, விடைபெறுகின்ற நேரமாவது இந்த இரு கனவான்களுக்கும் பரிசாகக் கிண்ணம் ஒன்று வெற்றிகொள்ளப்பட்டிருப்பதானது இலங்கை கிரிக்கெட்டுக்கும் ரசிகர்களுக்கும் மனது மறக்காத விடயமாக மாறியுள்ளது.


உலக T20 கிண்ணத் தொடர் ஆரம்பிக்கும் முன்னரே இலங்கைக்கு ஒரு பக்கம் அழுத்தத்தையும் மறுபக்கம் வெல்லவே வேண்டும் என்ற உத்வேகத்தையும் வழங்கியிருந்தது.

இலங்கை அணியை விட இறுதிப்போட்டிக்கு செல்லும்போது இந்திய அணிக்கு மனநிலையில் அதிக உறுதியும் அணி நிலையில் அதிக உறுதியும் இருந்தது.







தொடர்ச்சியான இறுதிப்போட்டி வெற்றிகள் (அதிலும் டோனியின் தலைமை யிலேயே) இந்தியாவுக்கு அளித்திருந்த மனவுறுதியும் தொடர்ச்சியாக இறுதிப் போட்டிகளில் இலங்கை கண்டுவந்த தோல்விகள் இலங்கைக்கு அளித்திருந்த கிலே சமும் இந்தியாவை வெற்றிவாய்ப்பு அதிகமுடைய அணியாகக் காட்டியிருந்தன.

எனினும் இலங்கை அணியிடம் நியூஸிலாந்துக்கு எதிரான வெற்றிக்குப் பின் ஏற்பட்டிருந்த ஓர் உறுதியான மாறுதல், இந்தியாவுக்கு எதிரான பந்துவீச்சின் போது மிகத் துல்லியமாக தெரிந்திருந்தது.

இலங்கையும் இந்தியாவும் மோதிக்கொண்ட 3ஆவது ICC கிண்ணம் ஒன்றின் இறுதிப்போட்டி இதுவாகும். (2002 - Champions Trophy - மழையினால் கிண்ணம் பகிரப்பட்டது. 2011 உலகக் கிண்ணம் - இந்தியா வென்றது)

போட்டி ஆரம்பிக்குமுன் பெய்த மழையும், மழை வருவதற்கான அறிகுறிகளும் மழை விதியை மீண்டும் அழைக்குமோ அல்லது பகிரவோ என்ற கேள்விகளையும் எழுப்பாமல் இல்லை.

ஆனால், சற்றுத் தாமதித்த போட்டியானது இடைநடுவே ஒரு மழைத்துளி இடையூறு கூட இல்லாமல் இலங்கைக்கு மறக்கமுடியாத வெற்றியைப் பரிசளித்துப் போயுள்ளது.




இப்போது இலங்கை அணியும் இந்தியாவைப் போலவே, (மூன்றாவது அணியாக மேற்கிந்தியத் தீவுக ளையும் சொல்லலாம்) ICCயின் எல்லாக் கிண்ணங்களை யும் வென்றெடுத்துள்ள பெருமையைப் பெற்றுள்ளது.

டெஸ்ட் அந்தஸ்து கிடைத்து 15 ஆண்டுகளுக்குள் 1996இல் உலகக் கிண்ணம் கிடைத்தது. இப்போது 18 ஆண்டுகளில் அடுத்த ICC கிண்ணமாக உலக T20. இது இவ்வளவு காலம் இருந்து வந்த மனத்தடை ஒன்றை உடைப்பதாக அமையலாம். இனி கிண்ணங்கள் குவிய லாம்.



இலங்கை அணியின் இரண்டு பொற்காலங்களைச் சேர்ந்த இரு தலைமுறை வீரர்களுக்கும் ஓர் உலகக்கிண் ணம். ICC கிண்ணமாவது அவர்களது ஓய்வுக்கு முன்னர் கிடைத்திருப்பது தன்னலமற்று அவர்கள் தாய்நாட்டுக்கு விளையாடியதற்கான பரிசாக அமைகிறது.






அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா, ரொஷான் மகாநாம, அசங்க குருசிங்க, முரளிதரன், வாஸ், ஹசான் திலகரத்ன, சனத் ஜயசூரிய, ரொமேஷ் களுவிதாரண, குமார் தர்மசேன, மார்வன் அத்தப்பத்து ஆகிய மூத்த வீரர்கள் இலங்கையின் முதலாவது உலகக் கிண்ணத்தைக் கொண்டுவந்தவர்கள்.

இவர்களில் அர்ஜுன, குருசிங்க, மகாநாம, களுவிதாரண தவிர ஏனை யோருக்கு 2002 சம்பியன்ஸ் கிண்ணத்தை வெல்லக்கூடிய பேறும் கிடைத்தது.






இந்த 90-2000 இருந்த அணிக்குப் பிறகு இலங்கையின் மிகச் சிறந்த சாதனைகள் படைத்த சிரேஷ்ட வீரர்கள் மஹேல, சங்கா, டில்ஷான், மாலிங்க, ரங்கன ஹேரத் ஆகியோர் தங்கள் கிரிக்கெட் வாழ்க்கையின் ஓய்வு காலத்தை நெருங்கி வரும் நிலையில் இதுவரை உலகக்கிண்ண, மற்றும் ICC கிண்ணங்களின் தோல்விகளுடன் கழிந்த விரக்திப் பொழுதுகள் ஒரு மிகப் பெரிய வெற்றிக் கனியைப் பரிசளித்துள்ளன.

பங்களாதேஷின் இரவுப் பனி மிர்ப்பூரில் பெரிதாகத் தாக்கம் செலுத்தாவிட்டாலும், மழையின் அச்சுறுத்தல் காரணமாக நாணய சுழற்சியின் முக்கியத்துவம் இருந்தது.

இலங்கையின் தலைவராக மூன்றாவது போட்டியில் தலைமை தாங்கிய லசித் மாலிங்க, இலங்கை முதலில் களத்தடுப்பில் ஈடுபடும் என்று முடிவெடுக்க சில காரணங்கள் இருந்தன.

மழை குறுக்கிட்டால் டக்வேர்த் - லூயிஸ் முறைப்படி இலக்கை அடைவது சாதகமானது.

தொடர்ச்சியாக இந்தியாவை வெற்றிகரமாகத் துரத்தியடிக்கும் அணியாகக் கடும் பலமான துடுப்பாட்ட வரிசை எந்தப்பெரிய இலக்குகளையும் அண்மைக்காலமாக வெற்றிகண்டிருந்தன. அதிலும் குறிப்பாக விராட் கோளி இரண்டாவது துடுப்பாட்டத்தில் ஒரு மன்னர்.

ஆனால், கோளி முதலாவதாக ஆடினாலும் கூடத் தன்னால் வேகம் குறையாமலும் நிதானம் தவறாமலும் ஓட்டங்களைக் குவிக்க முடியும் என்பதை அதிரடியாட்டம் ஆடிக் காட்டியிருந்தார்.

ஆனால் இந்தியாவின் துரதிஷ்டம் அவர் மட்டுமே இறுதிப்போட்டியில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடியிருந்தார்.

இலங்கை அணியின் வியூகங்களுக்கு மிகப் பெரிய வெற்றி கிடைத்தது.

இந்தியாவின் ஒவ்வொரு துடுப்பாட்ட வீரர்களையும் பொறியில் சிக்கவைக்க அவர்கள் வகுத்த பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு வியூகங்களால் ஓட்டங்களைப் பெறுவதில் இந்தியாவின் விராட் கோளி தவிர்ந்த எல்லோருமே திக்கித் திணறினர்.

அதிலும் யுவராஜ் சிங்கும் வழமையாக இறுதி ஓவர்களில் சிக்சர் மழை பொழியும் தலைவர் டோனியும் மாட்டிக்கொண்டது தான் பெரும் ஆச்சரியம். ஒவ்வொரு இந்திய வீரர்களின் பலவீனம் அறிந்து

அந்த இடங்களில் பந்துகளைத் துல்லியமாக இலங்கைப் பந்துவீச்சாளர்கள் வீசியிருந்தார்கள்.

களத்தடுப்பாளர்கள் புதிய, புதிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள்.

இலங்கையின் இந்த வியூக வகுப்பில் மாலிங்கவுக்கு நிச்சயம் மஹேல, சங்கா ஆகியோரின் துணை இருந்திருக்கும்.

கோளியை தவிர, துடுப்பெடுத்தாடிய ஏனைய அத்தனை இந்திய வீரர்களும் 62 பந்துகளில் 53 ஓட்டங்கள்.

ஆனால் இலங்கை அணி வீசிய கடைசி 5 ஓவர்களில் இந்தியாவால் 30 ஓட்டங்களையே பெற முடிந்தது. அதிலும் கடைசி 3 ஓவர்களில் அடித்தாடிய கோளி கூட ஓட்டங்கள் குவிக்கத் தடுமாறினார்.

அவ்வளவு துல்லியமாக இலங்கையின் பந்துவீச்சாளர்கள் அடித்தாட முடியாதவாறு பந்துவீசி இருந்தார்கள்.

உலகின் மிகச் சிறந்த T20 இறுதி ஓவர்களின் பந்துவீச்சாக இதைக் குறிப்பிடலாம்.

ஆனால் கோளி, டோனி ஆகியோர் ரசிகர்களின் வசைகளில் இருந்து தப்பித்துக் கொள்ள, யுவராஜ் சிங் மட்டும் இந்திய ரசிகர்களின் கோபத்துக்கும் பழிச் சொல்லுக்கும் ஆளாகிப்போனார்.

கடைசி 4 ஓவர்களில் யுவராஜ் - 9 பந்துகளில் 4 ஓட்டங்கள், டோனி - 7 பந்துகளில் 4 ஓட்டங்கள், கோளி - 8 பந்துகளில் 7 ஓட்டங்கள்.

லசித் மாலிங்க மட்டுமில்லாமல், குலசேகர, சச்சித்திர சேனநாயக்க ஆகியோரும் கூட மிகக் கட்டுப்பாடாக, முன்னாள், இந்நாள் வீரர்களின் பாராட்டுக்களைப் பெறும் அளவுக்கு மிகச் சிறப்பாகப் பந்துவீசி இருந்தார்கள்.

ஒரு பந்துவீச்சாளர் அணித் தலைவராக இருந்து ஓர் அணிக்கு ICC கிண்ணம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்த முதல் சந்தர்ப்பம் இது.

அதேபோல, அரையிறுதி வரை எந்தவொரு போட்டிகளையும் தோற்காமல் வந்த அணி, கிண்ணம் வென்றதில்லை என்பது மீண்டும் நடந்தது.

131 என்ற இலக்கு மேலோட்டமாக இலகு போல் தெரிந்தாலும், இறுதிப்போட்டியின் அழுத்தமும் இலங்கை அணிக்கெதிராக முன்னைய இந்திய செல்வாக்கும் இந்தப் போட்டியை போட்டித்தன்மையுடையதாக மாற்றும் என்றே எண்ண வைத்தது.

அதிலும் இந்திய சுழல் பந்துவீச்சாளர்கள் இருக்கையில் கொஞ்சம் சிக்கல் இருக்கும் என்ற எண்ணம் பரவலாக இருந்தது.

குசல் ஜனித் பெரேரா, டில்ஷான் ஆகியோரின் ஆட்டமிழப்புக்களுக்குப் பின், தங்கள் இறுதிப்போட்டியில் விளையாடும் கிரிக்கெட் நண்பர்களும் கிரிக்கெட் தாண்டியும் உயிருக்குயிரான நண்பர்களாக இருக்கும் இலங்கையின் இரு கிரிக்கெட் சிகரங்கள் சேர்ந்துகொண்டார்கள்.

தமக்கிடையே 1,700 மணிநேரங்களையும், 600க்கு மேற்பட்ட சர்வதேசப் போட்டிகளையும் கொண்டுள்ள மஹேலவும் சங்காவும் T20 சர்வதேசப் போட்டியொன்றில் இறுதியாக இணைந்தார்கள்.

இந்த இறுதி இணைப்பு தனிப்பட்ட முறையில் இருவருக்கும் ஒரு முக்கிய கிண்ணம் பெறும் பெருங்கனவுடன் தங்கள் நாட்டுக்கான பெரிய கடமையொன்றை நிறைவு செய்யும் இறுதி முயற்சியொன்றையும் முன்கொண்ட இவர்கள் பெற்ற ஓட்டங்கள் 24. ஆனால் அந்த 24உம் இலங்கை கிரிக்கெட் வரலாற்றில் மிக முக்கியமானவையாக அமைந்தன.

மஹேல ஆட்டமிழக்கும் நேரம் இலங்கையின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டிராவிட்டாலும் கூட, முன்னைய 4 இன்னிங்ஸில் மொத்தமாக 19 ஓட்டங்களையே பெற்றிருந்த சங்கக்கார நிதானமாக நின்று ஓட்டங்கள் பெறும் நிலையில் இருந்தார்.

சங்காவுக்கு மறுபக்கம் துணை இருந்தால் வெற்றி நிச்சயம் என்னும்போது, இந்தத்தொடர் முழுதும் இலங்கைக்கு நல்ல முடிவுத் தருணங்களைப் பெற்றுக்கொடுத்த Finisher மத்தியூஸ் வருவார் என்று நம்பியிருக்க, அதிரடியாக ஆடும், ஆனால் இத்தொடரில் பெரிதாக ஓட்டங்கள் பெறாத இன்னொருவர் திசர பெரேரா அனுப்பிவைக்கப்பட்டார்.

இது இலங்கையின் இன்னொரு சாமர்த்தியமான அணுகுமுறையாக அமைந்தது.

முக்கியமான தருணங்களில் களத்துக்குத் திரும்பி தேவையான ஓட்டங்களைப் பெறும் Big match players போல திசர நிகழ்த்திய அதிரடி ஓட்டக்குவிப்பு இந்தியப் பந்துவீச்சாளர்களை நிலைகுலைய வைத்தது.

இது நிதானமாக ஓட்டங்கள் பெற்றுக்கொண்டிருந்த சங்கா, வேகமாக ஓட்டங்கள் குவிக்க வாய்ப்பை வழங்கியது.

சங்கக்கார தனது 8ஆவது T20 சர்வதேச அரைச் சதத்தைப் பெற்ற அதேவேளை, 25,000 சர்வதேச ஓட்டங்களையும் பூர்த்தி செய்தார்.

முன்னதாக மஹேல உலக T20 போட்டிகளில் 1,000 ஓட்டங்களைப் பூர்த்தி செய்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றிருந்தார்.

வழமையாக மைல் கற்களை அடையும் நேரங்களில் அமைதியாகக் கொண்டாடும் சங்கா, இந்த அரைச் சதத்தை மிக உற்சாகம், ஆவேசமாகக் கொண்டாடிய காட்சி, இந்தப் போட்டியும் சங்காவின் ஓட்டங்களும் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதைக் காட்டி நின்றன.

திசர அடித்த மூன்றாவது சிக்ஸர், இலங்கையின் வெற்றி ஓட்டங்களைக் கொண்டுவந்தது. அது 13 பந்துகள் மீதமிருக்க இலகுவான வெற்றியாக அமைந்தது.

இந்த வெற்றிக்காகவே காத்திருந்த இலங்கை ரசிகர்கள்,

ஓடிவந்து மைதானத்தின் நடுப்பகுதியில் சங்காவையும் திசரவையும் ஆரத்தழுவிய காட்சி மீண்டும் 1996ஐ மனதுக்குள் கொண்டுவந்தது.

சின்னக் குழந்தைகள் போல குதூகலித்தாலும், மறக்க முடியாத இந்த வெற்றியின் புல்லரிப்பும் நெஞ்சு நிறைந்த வெற்றிக்களிப்புடன் ஆனந்தக் கண்ணீருடன் கொண்டாடிய இலங்கையின் சிரேஷ்ட வீரர்கள், எத்தனை காலம் இந்தத் தருணத்துக்காகக் காத்திருந்தார்கள் என்று சிந்திக்க செய்தது.

அதிலும் தேர்வாளர் குழுவின் தலைவர் சனத் ஜயசூரிய (இவர் இத்தொடர் ஆரம்பிக்க முதல் மஹேல & சங்காவுடன் கருத்து வேற்றுமைகளைக் கொண்டிருந்தாலும் தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொண்ட தருணம் விளையாட்டின் வெற்றி எல்லாவற்றையும் மறக்கடிக்கும் என்று காட்டி நின்றது), பயிற்றுவிப்பாளர் குழாமில் இருக்கும் முன்னாள் வீரர்கள் உட்பட, முன்னாள் வீரர்கள் அனைவரும் களத்தில் நின்று வாழ்த்தி, மகிழ்ச்சியில் கலந்துகொண்டது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

இலங்கையின் இந்த வெற்றி சில முக்கியமான அடிப்படைகளை அடையாளப்படுத்தியுள்ளது.

❖ லசித் மாலிங்க மற்றும் இலங்கையின் பந்துவீச்சாளர்களின் இறுதி ஓவர்களின் கட்டுப்பாடான பந்துவீச்சு.

❖ இந்த நேரத்தில் தான் அதிருப்திப்படாமல், அணிக்குள் குழப்பம் தராமல் நியமிக்கப்பட்ட தலைமைப் பதவியை அணியின் நலனுக்காக விட்டுக்கொடுத்த தினேஷ் சந்திமாலையும் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

இந்த அணியொற்றுமை தொடர்ந்தும் இருக்குமானால், 2015 உலகக் கிண்ணம் என்னும் பெரும் கனவும் கைகளில் வசப்படும்.

இரு பெரும் சிகரங்களுக்கு வெற்றியுடன் விடை கொடுக்கும் வாய்ப்பு இலங்கை அணிக்குக் கிடைத்ததையும் 18 ஆண்டுகாலத்தின் பின் பெற்ற வெற்றிக்கிண்ணமும் அளித்த உற்சாகத்தைத் தான் நன்றியுடன் கடந்த 8ஆந் திகதி இலங்கை ரசிகர்கள் விமான நிலையம் முதல் காலி முகத்திடல் வரை காத்திருந்து வெளிப்படுத்தியிருந்தார்கள்.

காலி முகத்திடலில் நடைபெற்ற வரவேற்பு இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து வீரர்கள் அலரி மாளிகைக்கு சென்றனர். அலரிமாளிகையில் வைத்து ஜனாதிபதி வீரர்களுக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

மறுதினம் மாலை பாராளுமன்றத்தில் வீரர்களுக்கு செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இப்போது கனவு பலித்தது...

அடுத்து உலக T20 அணி புதிய சகாப்தம் நோக்கி இனி பயணிக்க இந்த வெற்றி ஓர் ஆரம்பமே...

இந்த உலக T20 தொடர் தந்த அதிர்ச்சிகள், அடையாளங்கள், சாதனைகள், தடங்கல் பல இருந்தாலும் வெற்றியின் வழித்தடமாகப் பதிந்த ஹேரத்தின் நியூஸிலாந்துக்கு எதிரான பந்துவீச்சு, மாலிங்கவின் இந்தியாவுக்கு எதிரான இறுதி ஓவர், திசரவின் சிக்சர்கள், சங்காவின் 50 உற்சாகம்...

இவற்றோடு சங்கா, மஹேலவின் ஆதரவு அணைப்பும் ஆனந்தக் கண்ணீரும் எத்தனை காலம் சென்றும் மறக்க முடியாத நினைவுகளாகப் பதியப்போகின்றன.






## குமார் சங்கக்கார

| | |
|---|---|
| போட்டிகள் | :- 56 |
| இன்னிங்ஸ் | :- 53 |
| ஓட்டங்கள் | :- 1382 |
| அதி கூடியஓட்டம் | :- 78 |
| ஓட்ட சராசரி | :- 31.40 |
| முகங்கொண்ட பந்துகளின் எண்ணிக்கை | :- 1156 |
| ஓட்டவேகம் | :- 119.55 |
| சதம் | :- இல்லை |
| அரைச்சதம் | :- 08 |
| 04 ஓட்டங்கள் | :- 139 |
| 06 ஓட்டங்கள் | :- 20 |
| பிடிஎடுப்புகள் | :- 25 |
| ஸ்டம்ப்கள் | :- 20 |
| கன்னி போட்டி | :- இங்கிலாந்து அணியுடன் ஜூன் 15, 2006 |
| கடைசி போட்டி | :- இந்தியா அணியுடன் ஏப்ரல் 06, 2014 |

## மஹேல ஜயவர்தன

| | |
|---|---|
| போட்டிகள் | :- 55 |
| இன்னிங்ஸ் | :- 55 |
| ஓட்டங்கள் | :- 1493 |
| அதி கூடியஓட்டம் | :- 100 |
| ஓட்ட சராசரி | :- 31.76 |
| முகங்கொண்ட பந்துகளின் எண்ணிக்கை | :- 1121 |
| ஓட்டவேகம் | :- 133.18 |
| சதம் | :- 01 |
| அரைச்சதம் | :- 09 |
| 04 ஓட்டங்கள் | :- 173 |
| 06 ஓட்டங்கள் | :- 33 |
| பிடிஎடுப்புகள் | :- 17 |
| கன்னி போட்டி | :- இங்கிலாந்து அணியுடன் ஜூன் 15, 2006 |
| கடைசி போட்டி | :- இந்தியா அணியுடன் ஏப்ரல் 06, 2014 |





# கொழும்பு கம்பன் விழா 2014

டாக்டர் - ஜின்னாஹ் சரிபுத்தீன்

கம்பன் காவியக் காவலன் கம்பவாரிதி இ. ஜெயராஜ் கொழும்புக்குப் புலம் பெயர்ந்து இத்தோடு சுமார் பதினைந்து ஆண்டுகள் ஆகிவிட்டன. தானே முன்னின்று தன்னோடு ஒரு இளந் தமிழ்ப்படையை உடன் சேர்த்து, இதுவரை பதின் நான்கு கம்பன் விழாக்க ளைத் தலைநகரில் வெற்றியோடு நடத்தி யுள்ளார். இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 13ம் திகதி தொடக்கம் 16ம் திகதிவரை நான்கு நாட்கள் வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் கம்பன் விழா மிகச் சிறப்பாக நடைபெற்று முடிவடைந்துள்ளது.

எத்தனையோ இடர்பாடுகளுக்கும், எதிர்ப் புக்களுக்கும் மத்தியில் தலைநகரில் துணிந்து தமிழுக்கு விழாவெடுத்து, இலங்கை மண்ணில் தமிழருக்கான உரிமையை உலகுக்குணர்த்தும் செயற்பாடாகக் இக் கம்பன் விழாக்கள் கம்பன் கழகத்தால் வருடா வருடம் நடத்தப்பெற்று வருகின்றன.

தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் நடை பெறும் கம்பன் விழாக்களிலெல்லாம் மிகச் சிறப்பாக நடைபெறும் கம்பன் விழா, கொழும்புக் கம்பன் விழா என அனைவரா லும் போற்றப்படுமளவு கம்பன் விழா திட் டமிட்டு நடத்தப்படுகின்றது. இம்முறையும் அவ்வாறே சொல்லக் குறையேதுமின்றி வெற் றிகரமாக விழா நிகழ்ந்து முடிந்தது.

முதல் நாள் மாலை தொடங்கி, மூன்று நாட் கள் காலை, மாலையென நிகழ்ச்சிகள் நடை பெற்றன. முதல் நாள் பிற்பகல் ஐந்து மணிக் குக் கம்பன் கோட்டத்திலிருந்து மேளதாள நாதஸ்வர வாத்தியங்க ளோடு தொடங்கிய ஊர்வலம் இராமகிருஷ்ண மிஷன் மண்ட பத்தைச் சென்றடைந்தது. விருந்தினர்களும் பேராளர்களும் மலர் மாலை அணிவித்து அழைத்துவரப்பெற்று வர வேற்கப்பட்டனர்.

விழாமேடை அலங்காரங்கள் வழக்கம் போல் கண்களுக்கு குளிரூட்டின. ஒருபுறம் கம்பனின் உருவம் தாங்கிய வண்ணப் படச் சட்டமும், மறுபுறம் இராமசீதா ஹனுமரின் சிலைகள் கொண்ட சட்டமும் வைக்கப் பெற்றிருந்தன. அத்தோடு அரச சிம்மாசனங்கள் போன்ற இருக்கைகள் பரந்திருக்க, அவற்றின் மேல் பற்பல வண்ணங்கொண்ட குடைகள் அவற்றிற்கு மேலும் அழகு சேர்த்தன. உட்புறத்தில் சுற்றிலும் பலநிறப் பதாதைகளும் தோரணங்களும் தொங்கின. மொத்தமாய் மேடை அரச கொலு மண்டபம் போல் காட்சி தந்ததெனில் மிகையில்லை.

தொடக்கவிழா வழமைப்போல் மங்கள விளக்கேற்றல், கட வுள் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை, தொடக்கவுரை, எனத்தொடர்ந்து நூல் வெளியீடு நடைபெற்றது. அருணாசலக் கவிராயர் எழுதிய "இராம நாடகக் கீர்த்தனை" என்னும் நூலும் கம்பவாரிதி இ. ஜெயராஜ் எழுதிய "கம்பனோடு கால் நூற்றாண்டு" என்னும் நூலும் வெளியிடப்பட்டன. அடுத்து 2013ம் ஆண்டு கம்பன் விழா இறுவட்டும் வெளியிடப்பட்டது.

தொடர்ந்து விருது வழங்கலும், பரிசளிப்பும், சமூக நிதியுதவி நிகழ்வும் நடைபெற்றன. துறைசார்ந்த ஆளுமைகளை கௌரவித்து வழங்கப்பெறும் "நாவலர் விருது", விபுலானந்தர் விருது", மகரந் தச் சிறகு விருது", நூலழைபுலம் ஆய்வுவிருது", ஏற்றமிகு இளைஞர் விருது" என்பவற்றோடு, அமரர் துரை விசுவநாதன், அமரர் பொன் பாலசுந்தரம் ஆகியோரின் பெயரிலான நினைவுப் பரிசில்களும் வழங்கப்பெற்றன. பல்துறைசார்ந்த திறனாளர்கள் இன, மத வேறு பாடின்றி தேர்வுசெய்யப்பெற்றுக் கௌரவம் பெற்றனர். தொடக் கத்திலிருந்தே நடைபெறும் இந்த நடைமுறை கம்பன் கழகத்தின் சமூக நல்லிணக்கத்திற்குச் சான்றுடையதாகும்.

அன்றைய நாளின் இறுதி நிகழ்வாக நாட்டிய வேள்வி அரங் கேறியது. இந்நிகழ்வில் "இரணியன் வதை" என்னும் பொருளில்

தென்னக நாட்டியத்தாரகை கலைமாமணி, திருநங்கை நர்த்தகி நடராஜின் நாட்டியம் சபையோரின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்று நடந்ததோடு நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

இரண்டாம் நாள் காலை நிகழ்வுகள் வழமைப்போல் தொடக்கம் பெற்று பேராசிரியர் இரா. செல்வ கணபதி அவர்களின் "வள்ளலையே அனையாள்" என்னும் பொருளிலான தனியுரையுடன் ஆரம்பமானது. தொடர்ந்து விவாத அரங்கு "உயர்கம்பன்காட்டும் ஒப்பில்லா உறவு எது" என்னும் பொருளில் இலக்கியச்சுடர் இராமலிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. நமது மண்ணின் இளைய தலைமுறையினர் பங்குகொண்டு தமது திறமையை நிரூபித்தனர்.

மாலையில் சிறப்பு நிகழ்வாகப் பட்டிமன்றம் சபையோரின் கருத்துக்குத் தீனியானது. "விடைக்காணமுடியாத விசித்திரம் பெரிதும் பொதிந்திருப்பது" என்னும் பொருளில் "அகலிகை சாபவிமோசனம்", "வாலிவதை", "சீதை தீக்குளிப்பு" என்னும் தலைப்புக்களில் தொடர்ந்துநடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் நாட்டுப் பேச்சாளர்களுடன் எம்மவர்களும் வாதம் செய்தனர். விவாதத்தை கம்பவாரிதி இ. ஜெயராஜ் நடுவராகத் தலைமைதாங்கி நெறிப்படுத்தினார். தலைப்புக்கு இருவராக மூன்று தலைப்புகளில் சொற்போர் தொடங்கிற்று. இரு தரப்பினரும் தத்தமது தலைப்புகளுக்கேற்ப சிறப்பாக வாதிட்டுத் தம்பக்க நியாயத்தை வலுப்படுத்தினர். மண்டபம் நிறைந்த சபை, சபையின் கரகோச ஆரவாரம் பேச்சாளர்களை உற்சாகப்படுத்த நிகழ்ச்சி களைகட்டியது. நீண்ட கருத்தாழம் மிக்க வாதங்களின்பின் முத்தாய்ப்பாய் "விடைகாண முடியாத விசித்திரம் பெரிதும் பொதிந்திருப்பது" வாலி வதையிலேயே என தரப்பினர் வழங்கிய சான்றுகளின் பேரில் தலைவர் தீர்ப்பளித்தார்.

மூன்றாம் நாள் காலை நிகழ்வு புலவர் இரா. சண்முக வடிவேல் தலைமையில் இலக்கிய ஆணைக்குழு "தன்னிகரில்லாத தலைவனாய் இராமனை ஆக்கும் பண்புகளில் தலையாயது" என்னும் பொருளில் நடைபெற்றது. "ஊராண்மையே", "உலக நேசிப்பே", "ஏகபத்தினி விரதமே", "காருண்யமே", "இருவினை ஒப்பே", "அறநிமிர்வே", "பணிவுடைமையே", "சகோதரத்துவமே" என்னும் பல்வேறு தலைப்புக்களில் ஆய்வு செய்யப்பெற்றன. இந்த நிகழ்வில் இலங்கை இளைஞர்களுடன் இந்தியப் பேச்சாளர்களும் தமது வாதத்திறன் காட்டிப் பேசி அவையின் ஆரவாரத்தைப் பெற்றனர்.

மாலை நிகழ்வின் மகுடம் போல் கவியரங்கம் அமைந்தது. கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமாரின் தலைமையில் "பூதங்கள் தோறும் உறைந்தது" என்னும் மகுடத்தில் நடைபெற்றது. பஞ்ச பூதங்களின் வடிவில் தனித்தனியாய்க் கம்பன் வந்தால் என்பதனை நம்நாட்டு இளைஞர்கள் அற்புதமாய் நிறுவினர். நாட்டு நடப்பின் சீர்கேடுகள் நாசூக்காய்க் கவிதைகளில் சுட்டப்பெற்றன. சொற்சுவையையும், பொருட் சிறப்பும், ஓசை நயமும் கவிதைகளில் பொங்கிப் பெருகின. கவிதைக்கு மாந்திய சபையின் கரகோசங்கள் உற்சாக மூட்டின.

அன்றைய இறுதி நிகழ்வாக பேராசிரியர் இரா. செல்வ கணபதி அவர்களின் தலைமையில் உரையரங்கு தொடங்கியது. இலக்கிய சுடர் த. இராமலிங்கம் அவர்களும், பேராசிரியர் வீ. அசோக் குமாரன் ஆகியோர் பங்கு கொண்டனர். பொருள் "பாரதியில் கம்பனைக் கண்டேன்" என்றும், "கம்பனில் பாரதியைக் கண்டேன்" என்றுமாகும்.

நான்காம் நாள் காலை வழமைப் போல் சம்பிரதாயப்படி தொடங்கிய விழா பேராசிரியர் வீ. அசோக்குமாரனின் "கம்பனில் சமணம்" என்னும் பொருளிலான தனியுரையுடன் நகர்ந்தது அதனைத் தொடர்ந்து பேராசிரியர் இரா. செல்வகணபதி தலைமையில் "மானுடம் வென்ற தம்மா" என்னும் பொருளில் "சிந்தனை அரங்கு" ஆரம்பமானது. இவ்வரங்கில் "கடவுளும் மனிதனும்" அரக்கனும் மனிதனும்" பறவையும் மனிதனும்" மிருகமும் மனிதனும்" என்ற உப மகுடங்களில் நால்வர் பேசினர்.

அன்று மாலை முதல் நிகழ்வாக "ஆன்றோர் கௌரவம்" நடைபெற்றது. பல்துறைசார்ந்த ஆளுமைகள், மக்கள் தொண்டாற்றும் மாமனிதர்கள் இன, மத, மொழி பேதங்களற்று கௌரவம் பெற்றனர். எஸ்.ரி.ஆர். பிலிம்ஸ் அதிபர் எஸ். தியாகராஜா, கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி. கட்டட வரைஞர் ஆர். சிவராமன், கவிஞர் பராக்கிரம கொடித்துவக்கு, தேவி ஜுவலர்ஸ் அதிபர் என்.எஸ். வாசு, அறங்காவலர் கலாநிதி. ஆறு. திருமுருகன் ஆகியோரைக் கம்பன் கழகத்தினர் தேர்ந்தெடுத்து அவர்களின் அறப்பணிகளுக்காகப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து நினைவுச் சின்னமும் வழங்கிக் கௌரவித்தனர்.

கம்பன் விழாவின் இறுதிநாள் இறுதி நிகழ்வாக "வழக்காடு மன்றம்" நடைபெற்றது. "முன்பின் முரணான இராமனின் செயற்பாடுகள் குற்றம்" என்னும் பொருளில் வழக்குத் தொடரப்பட்டு வாதங்கள் நிகழ்த்தப் பெற்றன. "இராவணனுக்கு வழங்கிய வாய்ப்பை பாலிக்கு வழங்காமை", "அகலிகைக்கு வழங்கிய வாய்ப்பை சீதைக்கு வழங்காமை என்பன வாதத்தின் குற்றப் பதிவுகளாயின. இலங்கை இந்திய அறிஞர்கள் வாதி, பிரதிவாதிகளாகத் தங்கள் பக்க வாதங்களை மொழிந்தனர். கம்பவாரிதி இ. ஜெயராஜ் மலேசிய அமைச்சர் டத்தோ எம். சரவணன் ஆகியோர் நீதிபதியாகப் பதவி கொண்டனர். மிகச் சுறுசுறுப்பாகவும், சபையோரின் ஏகோபித்த மகிழ்ச்சி ஆரவாரமும் நிகழ்வைத் தொய்வடையாது நடைபெறச் செய்தன.

கம்பனின் காவியம் காலத்தை வென்று நிற்பது, உலகளாவிய ரீதியில் நினைவு கூரப்படும் இராமகதை, கம்பனால் கன்னித் தமிழில் நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு பொக்கிஷமாகும். சமயங்களால் வேறுபடினும் கம்பன் தமிழில்காமுறாதார்இல்லையெனலாம். கடல் போன்ற கவிதைப் பெருக்கில் மனித வாழ்வுக்கான உன்னத தத்துவங்களையும், இலக்கிய இன்பத்தையும் பதித்து கம்ப காவியத்தைப் படைத்தளித்துள்ளான் கம்ப நாடான். அந்த உன்னத இலக்கியம் காலத்தால் அழிவுறாது காக்கும் உயர் பணியை தன் தலையில் தாங்கி வருடாவருடம் விழாவெடுக்கும் கம்பன் கழகம் போற்றதற்குரியது. அதனை வாழ்த்தி வரவேற்போம்.


# கௌரவம் பெற்ற சான்றோர்



## தாழ்விலாச் செல்வன்!

எஸ். தியாகராஜா
(அதிபர், எஸ்.ரி.ஆர். பிலிம்ஸ்)
கம்பகலாநிதி இரா. இராதாகிருஷ்ணன் விருது
நிறுவியவர்: கழக முன்னாள் செயலர்,
அமரர் பொன். பாலசுந்தரம்


தன்னுடைய உழைப்பினாலே தரணியை வெற்றிக் கொண்டு மண்ணில்வாழ் உயிர்கள் யாவும் மகிழ்ந்திடச் செய்தோன். கண்ணென இனத்தைப் போற்றி கற்றவன் உவக்க என்றும் தன்தமிழ், சமயம் காத்த தாழ்விலாப் பெரிய செல்வன்!



## அல்லாஹ்வின் நேசன்!

கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி
(இயக்குநர், ஜாமியா நளீமியா கலாபீடம்)
வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை விருது
அமரர் கே. விஜயாலயன் நினைவாக நிறுவியவர்
திரு. எஸ். கணபதிப்பிள்ளை


அல்லாஹ்வின் கருணையாலே அவனியில் வந்துதித்து வல்லோன் தன் மார்க்கம் தன்னை வளர்த்திடச் செய்து இன்று எல்லோரும் வியந்து நிற்க இஸ்லாமாம் நெறியை ஓதி பல்லோரும் போற்ற இந்தப் பாரெல்லாம் பரப்பும் நல்லோன் !



## கலை தெரிகலைஞன்!

ஆர். சிவராமன்
(கட்டட வரைஞர்)
பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் விருது
அமரர் க. சுப்பிரமணியம் நினைவாக நிறுவியவர்:
திரு. சு. திருஞானசம்பந்தர்


மலையக மைந்தன் மகிமையால் விண்ணைத்தொட்ட கலைதெரி கலைஞன் நல்ல கட்டடம் பலவும் செய்தோன் நிலையெனப் புகழை நாட்டி நிமிர்வு சேர் பதவியெல்லாம் தலைமையால் நிமிர வைத்த தன்மையன் தனித்த மாண் பன்!



## விநயமாய் வாழும் வேந்தன்!

என்.எஸ். வாசு
(அதிபர், தேவி ஜுவலர்ஸ்)
கம்பவாணர் அ. அருணகிரி விருது
நிறுவியவர்: கம்பகாவலர் புதுவை
ந. கோவிந்தசாமி முதலியார்

தன் செல்வம் பிறருக்காக்கி, தரணியில் அறங்கள் வாழ முன்னின்று உழைக்கும் நல்லோன் முயற்சியால் வென் றோன் பொன்னென மனத்தை மாசு போக்கியே புகழின் நீளம் விண்வரை உயர்த்தி என்றும் விநயமாய் வாழும் வேந்தன் !




## மானுடம் வாழவைப்போன்!

கவிஞர் பராக்கிரம கொடித்துவக்கு
(சிங்களக் கவிஞர்)
கம்பன் அடிப்பொடி சா. கணேசன் விருது
நிறுவியவர்: பாரத் பல்கலைக்கழகத் துணைவேந்தர்
டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன்

கவிஞர் பராக்கிரமகொடித்துவக்கு

இனப்பகை சிறிதும் இன்றி எல்லோரும் மனிதர் என்று மனதுள்ளே எண்ணி இங்கு மானுடம் வாழவைப்போன் தனக்குள கவிதை ஆற்றல் தரணிக்குத் தந்து நல்ல பிணக் குகள் நீக்குகின்ற பேரறிவாளன் சான்றோன் !



## வளம் தரும் வண்மையாளன்!

காநிதி ஆறு. திருமுருகன்
(அறங்காவலர்)
மகாவித்துவான் சி. கணேசையர் விருது
சுவாமி சாந்தானந்த சரஸ்வதி நினைவாக நிறுவியவர்
திருமதி அ. கயிலாசபிள்ளை

அல்லற்பட்டழுது நிற்கும் அனைவருக்கும் அன்பி னாலே வள்ளலாய் இருந்து வாழ்வு வளம் தரும் வண் மையாளன் தெள்ளிய தமிழால் சைவத் தெளிவெலாம் எடுத்துச் சொல்லி நல்லவர் உள்ளத்தை வென்று நன்மை கள் பலவும் செய்வோன் !

# டிஜிடல் மயமாகும் தொலைத்தொடர்புசேவை

**நூருல் அயின் நஜ்முல் ஹுசைன்**

இலங்கையின் பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றான ஆசியாவின் ஆச்சரியமிக்க தாமரை கோபுரம் கட்டடத் தொகுதியின் நிர்மாண வேலைகள் அடுத்த ஆண்டு இறுதியில் நிறைவு பெறும் எனவும் ஆரம்ப வேலைகள் அடுத்த ஆண்டு (2015ஆம் ஆண்டு) ஜனவரிமாதமளவில் நிறைவு பெறுமெனவும் தொலை தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான அனுஷ பெல்பிட்ட தெரிவித்தார்.

பல்வேறு பரிவர்த்தனை நிலையங்களை கொண்டதாக அமைக்கப்படும் இந்த தாமரைத் கோபுரம் ஆசியாவிலேயே மிகவும் உயரமான தாமரைக் கோபுரமாகவும் திகழவிருக்கிறது.

அத்துடன் இந்த நாட்டினது மட்டுமல்ல குறிப்பாக, கொழும்பு மாநகரின் அழகின் சின்னமாக திகழும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பிரான்ஸில் அமைந்துள்ள ஐஃபல் கோபுரம் 324 மீட்டர் உயரமுடையது. அதைவிட இலங்கையில் நிர்மாணிக்கப்படும் தாமரைத் கோபுரம் இந்த ஐஃபல் கோபுரத்தை விடவும் 26 மீட்டர் உயரமானதாகும்

எனவே, உலகிலேயே உயரமான கோபுரங்களில் இந்த தாமரைக் கோபுரம் ஐந்தாவது இடத்தை வகிக்கும் எனத் தொலை தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு நம்பிக்கை தெரிவிக்கிறது

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்காக கொழும்பு டீ.ஆர் விஜேவர்த்தன மாவத்தையில் நிர்மாணிக்கப்பட்டுவரும் இந்த தாமரைக் கோபுரத்துக்கான ஒதுக்கப்பட்ட மொத்த செலவினம்104.3 அமெரிக்க டாலர்களாகும்.

தற்சமயம் இந்த கோபுரத்தின் நிர்மாண வேலைகள் இரண்டு லட்சம் சதுர அடி அளவில் பூர்த்தியடைந்துள்ளன. எதிர்காலத்தில் இதன் நிர்மாண வேலைகள் வாரத்துக்கு ஐந்து மீட்டர் என்ற அடிப்படையில் நிறைவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்ப கட்ட நிர்மாண வேலைகள் நிறைவு பெற்றதுடன் இரண்டாம் கட்ட வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்படும். இதில் 1500 வாகனங்களை ஒரே தடவையில் நிறுத்திவைக்கக் கூடியதாக பாரிய வாகன தரிப்பிடம் ஒன்றும் வர்த்தக கட்டடத் தொகுதியும் நிர்மாணிக்கப்படும்.

இலங்கையின் அபிமானத்தையும் வளத்தையும் பிரதிபலிக்கும் வகையில் நிர்மாணிக்கப்படும் இந்த தாமரை கோபுரத்தின் நிர்மாணப் பணிகளை இரண்டு பிரதான சீனக் கம்பனிகள் (China National Electronics Import and Export Corporation (CEIEC) , Aerospace Long-March International Trade Co. Ltd (ALIT) பொறுப்பேற்றுள்ளன .

இதன் நிர்மாண வேலைகள் 2012ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. இக்கோபுரத்தின் நிர்மாண பணிகள் அடுத்த ஆண்டு இறுதியில் நிறைவு செய்யப்படும். மொரட்டுவை பல்கலைக்கழக கட்டடக் கலைஞர்கள் மற்றும் உள்ளூர் கட்டடக் கலைஞர்களின் பூரண ஒத்துழைப்பும் இதன் நிர்மாண வேலைகளுக்காக கிடைக்கின்றன.



PUBLIC LIBRARY
JAFFNA

வானொலி மற்றும் தொலைகாட்சிகளுக்காக 350 மீட்டர் உயரமான பரிவர்த்தனை கோபுரங்கள் இங்கு அமைக்கப்படும். அங்கு கண்காணிப்பு கூடம், உல்லாச ஹோட்டல்கள், தொலைதொடர்பு பரிவர்த்தனை நிலையங்கள் அனைத்தும் உள்ளடக்கியதாகவே இந்த தாமரைக் கோபுரம் அமைக்கப்படவுள்ளது எனத் தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான அனுஷ பெல்பிட்ட சுட்டிக்காட்டினார்.

10 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கியதாக நிர்மாணிக்கப்படும் உத்தேச தாமரைக் கோபுர திட்டத்துக்கு பூங்கா ஒன்றும் அமைக்கப்படும். இந்த கோபுரம் நிலத்துக்கு கீழ் நான்கு மாடிகளுடன் ஆரம்பமாகிறது.

இதில் அதிவேக மின்சார லிப்ட்டுக்கள் இயங்கவிருக்கின்றன. அதிவேக மின்சார லிப்டுகள் பொருத்தப்படுவதால் 85 முதல் 90 வரையிலான மாடிகளுக்கு சுமார் இரண்டே இரண்டு நிமிட குறுகிய நேரத்தில் சென்றுவிடலாம்.

நிலத்துக்குக் கீழான நான்கு மாடிகள் நிர்மாணிக்கப்பட்டதும் இந்த கட்டடம் ஒரு சிலிண்டரின் வடிவத்தில் காணப்படும். அது 270 மீட்டர் வரை அதாவது, 85 அல்லது 90 மாடிகள் வரை உயரும் தாமரைப் பூவின் வடிவில் வரும் கோபுரத்தில் ஒன்பது மாடிகள் உள்ளடக்கப்படும்.

இந்த ஒன்பது மாடிகளுக்கும் பார்வையாளர் கூடங்களும் அமைக்கப்படும். இந்த கோபுரத்தின் உச்சியிலிருந்து பார்த்தால் இலங்கை முழுவதும் மட்டுமல்ல சில வேளை இந்தியாவை கூட பார்க்கலாம் எனத் தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு தெரிவிக்கிறது. இதன் உச்சியிலிருந்து பெரும்பாலும் 100 முதல் 150 மீட்டர் வரையிலான தொலைவிற்கு பார்க்க முடியும்.

இதன் பார்வையாளர் அரங்கில் சுழலும் சிற்றுண்டிச் சாலைகளும் அமையவிருக்கின்றது. அதுமட்டுமல்ல, மாநாட்டு மண்டபம், திருமண மண்டபம், வரவேற்பு கூடங்களும் இதில் அடங்கும். முழுக் கொழும்பையும் ஒரே கோபுரத்தின் கீழ் பார்க்கக்கூடிய, ஆயிரம் பேர் வரை ஒரே தடவையில் அமரக்கூடிய கேட்போர் கூடமும் இங்கு அமைக்கப்படும்.

இதில் ஏனைய இரண்டு மாடிகளிலும் ஐந்து நட்சத்திர, ஆறு நட்சத்திர ஹோட்டல் அறைகள் 24ஐ உள்ளடக்கிய அதிநவீன சொகுசு ஹோட்டல்களும் அமையும். அவ்வாறே குறைந்த பட்சம் சுமார் 50 வானொலி நிலையங்களும் 50 தொலைகாட்சி நிலையங்களும் 20 தொலை தொடர்பு சேவை நிலையங்களும் அமைப்பதற்கு இடவசதி அளிக்கப்படும்.


பாதுகாப்பு சமிக்ஞைகள் வழங்குவதுடன் கொழும்பு நகரில் பல கட்டடங்களின் மேலே தற்சமயம் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிசக்திவாய்ந்த வானொலி எப்.எம் அண்டனாக்களை அகற்றுவதற்கு இதன் மூலம் வாய்ப்பேற்படும். கோபுரத்தின் அடிபாகத்தில் தொலைதொடர்பு குறித்த நூதனசாலை ஒன்றும் நிறுவப்படும்.

உணவகம் நிருவாக அலுவலகம் மற்றும் காட்சிக் கூடம் போன்றவையும் இதில் உள்ளடக்கப்படும். இதற்குப் புறம்பாக மேலும் இதில் உள்ளடக்குவது குறித்து விசேட கமிட்டியின் சிபார்சின் படி தீர்மானிக்கப்படும் எனவும் தொலைதொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட மேலும் தெரிவித்தார்.

இந்த தாமரை கோபுரத்தின் நிர்மாண பணிகள் நிறைவு பெற்றதும் இலங்கைக்கு வரும் உல்லாச பயணிகள் அதிகரிப்பதுடன் இலங்கையின் சுற்றுலாத் துறையில் பெரும் வளர்ச்சியை காணமுடியும் என்று உறுதியாக நம்பலாம்.

## வாசகர் கருத்து

**திங்கள் தொடர்பான உங்கள் கருத்துக்களை எமக்கு எழுதலாம்.**
**உங்கள் கருத்துக்களுக்கு நாங்கள் மதிப்பளிக்கின்றோம்.**
**நீங்கள் உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :**



**முள்ளும் மலரும்**

திங்கள் ஆசிரியர் பீடம்,
அரசாங்க தகவல் திணைக்களம்,
163, கிருலப்பனை வீதி,
கொழும்பு - 05
Email : info.thingal@gmail.com



# படுவான்கரை மக்களின் கனவு

## நனவாகிய நன்நாளி

**மட்டக்களப்பு மாவட்ட** மக்களின் வாழ்வுக்கும் வளத்துக்கும் உதவும் அதேவேளை தாங்கமுடியாத போக்குவரத்து துயரத்தையும் மட்டக்களப்பு வாவி கொடுத்துவந்தது. இதற்கு சிறந்த உதாரணம் மட்டக்களப்பு படுவான்கரை பிரதேசமாகும்.




ஒருநாடு முன்னேறுவதற்கு முதல் தேவை போக்குவரத்தாகும். படுவான்கரை பிரதேசத்தில் மிக நீண்டகாலமாக போக்குவரத்து வசதிகள் இன்மையால் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், நாகரிகம், வர்த்தகம், அபிவிருத்தி போன்ற துறைகளில் இன்றும் பின் தங்கிய பகுதியாகவே காணப்படுகின்றது.

படுவான்கரைப் பகுதி போரதீவுப் பற்று, மண்முனை தென் மேற்குபற்று, மண்முனை மேற்குபற்று என மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன. மேற்படி மூன்று பிரிவுகளும் 621.5 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்டுள்ளன. 14 பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்ட மட்டு. மாவட்டத்தில் 347 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளன. இவற்றில் 93 பிரிவுகள் மேற்படி மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளனவென்றால் இப்பிரதேசம் எவ்வளவு பெரியது என்று விளங்கிக் கொள்ளலாம்.

படுவான்கரை மக்கள் சிறு தேவைக்கும் எழுவான் கரையையே நாடவேண்டும். இன்றுவரை அப்பகுதியில் ஒரு மத்திய மகா வித்தியாலம், ஒரு ஆதார வைத்தியசாலை, ஒரு தொழிற்சாலை, ஒரு திணைக்களம் கூட ஏற்படுத்தப்படவில்லை. மத்திய மருந்தகங்கள், பிரசவ விடுதிகள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் 1970க்கு பின் ஏற்படுத்தப்பட்ட 3 பிரதேச செயலகங்கள் தவிர, எவையும் இல்லை. இத்தனைக்கும் மட்டக்களப்பு நெற்களஞ்சியம் என்றால் அது படுவான்கரையே.

இந்த இரு பெரும் பிரிவுகளுக்கிடையிலான போக்குவரத்து மட்டக்களப்பு வாவியூடாகவே நடைபெறுகின்றன. வடக்கில் இருந்து தெற்குவரை கிட்டங்கி, சவளக்கடை, அன்னமலை, துறைநீலாவணை, மண்டூர், குறுமன்வெளி, பட்டிருப்பு, அம்பிளாந்துறை, குருக்கள்மடம்,



மண்முனை, வவுனதீவு, வலையிறவு ஆகிய முக்கிய ஓடத்துறைகள் மூலம் போக்குவரத்து நடைபெற்றது. தோணிகள் மூலமே பயணம் மேற்கொள்ளப்பட்டது. தோணி நீரில் மூழ்கி வருடா வருடம் இத்துறைகளில் பலியானவர்களின் எண்ணிக்கை எண்ணிலடங்காதவை.

மண்முனை துறையில் இன்றுவரை சுமார் 25க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதாக வாய் மொழி மூலமான தகவல்கள் கூறுகின்றன. மேற்படி 7 ஓடத்துறைகளில் பல ஓடத்துறைகளுக்கு பாலங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன. அதேபோன்று சுனாமிக்குப் பின்னர் ஜெய்கா எனப்படும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் முகவர் எனப் பெயர் கொண்ட அமைப்பு இலங்கைக்கு வந்து அவ் ஓடத்துறைகளில் மேலும் இரண்டிற்கு பாலம் அமைத்துக் கொடுத்தது. பின்னர் எஞ்சி இருக்கும் ஓடத் துறைகளில் மண்முனைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மட்டக்களப்பில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி மண்முனைக்கு பாலம் அமைத்துத் தருவேன் என்று உறுதியளித்தார். மண்முனைக்கு பாலம் அமைப்பதற்கு தான் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மீள் குடியேற்ற பிரதியமைச்சர் பல கூட்டங்களில் வெளியிட்ட தகவல்களும் இங்கு குறிப்பிடத்தக்கது.

பாலம் திறப்பதற்கான அழைப்பிதழில் மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியினை நிறைவேற்று முகமாக ஜப்பான் அரசாங்கத்தின் நன்கொடை உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட "மண்முனைப் பாலம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மண்முனைத்துறையின் நீளம் சுமார் 500 மீற்றராகும். வெள்ள காலத்தில் வாவியூடாக நீர் கடலுக்கு வடிந்தோட வேண்டும். இல்லையேல் பெருவெள்ளம் ஏற்படும். இதனைக் கவனத்தில் கொண்டு 210 மீற்றர் நீளமான பாலமே அமைக்கப்பட்டுள்ளது. வெள்ள காலங்களில் நீர் பரந்து தங்குதடையின்றி வடிந்து ஓடக் கூடிய வகையில் ஏனைய பகுதிக்கு தாம்போதி கட்டப்பட்டுள்ளது.

ஜெய்கா நிறுவனம் 147 கோடி 30 இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியது. இலங்கை அரசாங்கம் 39 கோடியே 70 இலட்சம் ரூபாவை இதற்காக செலவிட்டுள்ளது.

மட்டக்களப்பு வரலாற்றில் மண்முனை மிகமுக்கிய இடத்தை வகித்தது. மட்டக்களப்பின் பூர்வ சரித்திரத்தை அறிய உதவும் மட்டக்களப்பு மான்மியத்தில் வட இந்தியாவிலே அயோத்தியின் முற்குகர் இலங்கைக்குப் படையெடுத்து வந்தனர். அவர்கள் இலங்கையின் கீழ்ப் பாகம் வந்தபோது ஒரு சதுப்பேரி காணப்பட்டது. அச்சதுப்பேரியினூடே தமது ஓடத்தைச் செலுத்தினர். அப்போது மண் செறிந்த ஓர் முனை குறுக்காக இருந்தமையினால் அதற்கு மண்முனை எனும் பெயரிட்டனர். உலக நாச்சி இருந்து ஆண்ட இடமும் மண்முனையாகும்.

இவ்வாறு புகழ் பெற்ற மண்முனைக்கு பாலம் அமைக்கப்பட்டு முற்குகர் வந்தகாலம் அனுபவித்த போக்குவரத்து துயர் நீங்கிவிட்டது. இதனால் பட்டிப்பளை




பிரதேசத்தில் வாழும் 26,333 பேர் மட்டுமன்றி வெல்லாவெளியில் வாழும் 43,579 பேரும் நன்மையடைந்துள்ளனர். மட்டக்களப்புக்கு வரும் அம்பாறை மக்களும் இப்பாலத்தை பயன்படுத்தலாம். இங்கு படகுச் சேவை மாலைவரையுமே நடத்தப்பட்டது. இரவில் அவசர சேவைக்கு இப்பகுதி மக்கள் மட்டக்களப்புக்கு வரவேண்டுமானால் அதிக மைல் தூரம் சென்று பட்டிருப்பு வழியாகவோ அல்லது அதிக மைல் தூரம் சென்று வலையிறவு வழியாகவோ அல்லது தான் வரவேண்டும். வெள்ள காலங்களில் பிரசவ தாயைக் கூட வைத்திய சாலைக்கு கொண்டு செல்லமுடியாத அவலம்.

சகல பொருட்களுக்கும் அங்கு தட்டுப்பாடு. உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு கிடைக்கவே கிடைக்காது. ஜீவனோபாயமான நெல்லைக் கூட உரிய விலைக்கு விற்க முடியாது. போக்குவரத்துக்காக அதிக நேரத்தையும், கூடுதலான பணத்தையும் மக்கள் செலவிட்டனர். துறையில் படகுக்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டிய அவலம். மூன்று வாகனங்களில் மாறிமாறி பயணிக்க வேண்டும் போன்ற துயரங்கள் இந்த புதிய பாலத்தால் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன.

பட்டிப்பளையில் தேவையானபோது போதிய பஸ் சேவை இன்மையால் மூட்டை முடிச்சுக்களுடன் கால்நடையாக பயணித்தனர். பட்டிருப்பு ஊடாக நடையாக பயணம் செய்யும் போது 20 கிலோமீற்றர் தூரத்தை மேலதிகமாகக் கடக்க வேண்டும். இது வரைகாலமும் தினசரி சுமார் 3500 க்கும் மேற்பட்டோர் மண்முனை துறையூடாக பயணித்துள்ளனர். இவை அனைத்துக்குமே விடிவு கிடைத்துள்ளது. பட்டிப்பளை பிரதேசத்தில் வாழும் 26,333 பேர் நேரடியாக நன்மையடையவுள்ளனர். வெல்லாவெளி பிரிவில் 43,579 பேர் வாழ்கின்றனர். இவர்களில் கணிசமானோர் எழுவான் கரையில் வாழும் பட்டிப்பளையில் தேவை உள்ளோரும், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கணிசமானோர் மண்முனைப் பாலத்தினால் நன்மை பெற்றுள்ளனர். மாணவர்கள், உத்தியோகத்தர்கள், வியாபாரிகளும் விதிவிலக்கல்லர். இவ்வாறு பல நன்மைகள் நிறைந்த மண்முனைப் பாலமே ஜனாதிபிதியினால் திறந்துவைக்கப்பட்டது.

இவ்வாறு மட்டக்களப்பு மாவட்டத்தில் வீதி அபிவிருத்திப் பணிகள் துரிதமாக இடம் பெற்று வருகின்றன. கடந்த 30 வருடகால போர்ச் சூழல் காரணமாக, பல வீதிகளும் பாலங்களும் அபிவிருத்தி செய்யப்படாது குண்டும் குழியுமாகக் காட்சியளித்தன. அவையாவும் கிராமத்திற்குகொரு வேலைத்திட்டம் மூலம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இன்று உள்ளூர் வீதிகள் பல கொங்கிறீட் வீதிகளாக செப்பனிடப்பட்டு வருவதோடு மக்களின் போக்குவரத்தும் இலகுவாக்கப்பட்டுள்ளது. கடந்த 30 வருடகாலப் போர் சூழலினால்







சிதைவடைந்த தேசத்தை இத்தனை விரைவில் அபிவிருத்தி செய்வதென்பது பெரும் சாதனை ஆகும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தலைமையிலான அரசு மஹிந்த சிந்தனை தூர நோக்கில் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை நிறைவேற்றுவதில் துரித முனைப்புக்காட்டி வருகின்றது. அந்த வகையில் கிழக்கில் மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளில் குறிப்பிட்டுக் கூறக் கூடியளவிற்கு மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த வருடம் மார்ச் மாதம் 22 ஆம் திகதி 92 வருடங்களாக ஒருவழிப் பாதையாக இருந்த மட்டக்களப்பு கல்லடிப் பாலம் புதிய இடத்தில் அமைக்கப்பட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்துவைக்கப்பட்டது. இக் கல்லடிப்பாலம் திறந்துவைக்கப்பட்டதன் மூலம் நீண்டகாலமாக கிழக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கிவந்த போக்குவரத்துப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மட்டு. கல்லடிப் பாலம் அரசு முன்னெடுக்கும் வீதி அபிவிருத்திப் பணிகளில் கிழக்கில் ஒரு மைல்கல்லாக இருந்தது.



## உடல் எடையை குறைக்க உதவும்

# மாதுளைப்பழம்!

மாதுளையில் பல வகையான உடல்நல பயன்கள் ஒளிந்து கொண்டிருக்கின்றன. மற்ற பழங்களில் அடங்கியிருக்கும் பயன்களைப் பற்றி தெரிந்த அளவுக்கு மாதுளைப்பழத்தில் அடங்கியிருக்கும் பயன்கள் பலருக்கும் தெரிவதில்லை. உடல் எடை குறைப்பு என்பது மாதுளைப்பழத்தில் உள்ள பயன்களில் முக்கியமான ஒன்றாகும்.

மாதுளைப்பழத்தில் உள்ள சத்துக்களை உள்ளடக்கிய மாத்திரைகள் கடைகளில் விற்கப்படுகின்றன. அதனை உண்ணுவது முற்றிலும் பாதுகாப்பானது. இந்த மாத்திரைகளை உட்கொண்டால், சிறப்பான மற்றும் பாதுகாப்பான முறையில் உடல் எடையை குறைக்கலாம். உடல் எடையை குறைக்க விரும்புபவர்களுக்கு 3 முக்கிய வழிகளில் பயனை அளிக்கிறது மாதுளைப்பழம்.

### ஆற்றல் திறன் செயலூக்கி

ஒருவரின் உடலில் உள்ள ஆற்றல் திறனின் அளவை அதிகரிக்க மாதுளைப்பழம் உதவுகிறது. இந்த ஆற்றல் திறன் அதிகரிப்பால், நீங்கள் எப்போதும் இருப்பதை விட, கூடுதல் சுறுசுறுப்புடன் இருப்பீர்கள். அதிகரித்த ஆற்றல் திறனால், உங்கள் உடல் அதிக அளவிலான உடற்பயிற்சியிலும் ஈடுபட முடியும். அதனால் உடல் எடை குறைவுக்கு இது உதவுகிறது தானே?

### பசியை கட்டுப்படுத்தும்

மாதுளைப்பழத்தில் நீர்ச்சத்து அதிகமாக உள்ளது. மாதுளைப் பழத்தில் உள்ள நீர்ச்சத்தால், உங்கள் உடலும் அதிகளவிலான நீர்ச்சத்துடன் விளங்கும். அதனால் உங்கள் பசியை அது கட்டுப்படுத்தும். உடல் எடையை குறைப்பதற்கு குறைவாக உண்ண வேண்டும் என்பது நம் அனைவருக்கும் தெரியும். பசி குறைவாக இருக்கும் போது உட்கொள்ளும் அளவும் குறையும் தானே.

### கொழுப்பை எரிக்கும்

மாதுளைப்பழத்தில் ஆன்டி-ஆக்சிடன்ட்கள் அதிகமாக இருப்பதால், உங்கள் உடலில் உள்ள கொழுப்புக்களை இயற்கையாகவும் பாதுகாப்பாகவும் எரிக்க உதவும்.

### குறிப்பு

உடல் எடையை குறைக்க முயலும் போது, நம் உடல்நலம் எந்த விதத்திலும் பாதிக்காத வகையில், நாம் அனைவரும் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். அதனை மனதில் வைத்து பார்க்கும் போது மாதுளைப்பழ மாத்திரைகள் சிறப்பாக செயல்படும். எந்த வித பக்கவிளைவுகளும் இன்றி உங்கள் உடல் எடையை குறைக்க இது உதவும்.

# முகப்புத்தக கணக்குகளை

## தடை செய்வது சாத்தியமற்றது



பேராசிரியர் ஆரியரத்ன அதுகல
களனி பல்கலைக்கழக மக்கள் தொடர்பாடல் கற்கைகள் பிரிவு

சமூக தளங்களை சரியாக பயன்படுத்த வேண்டும் என்ற அறிவு எமக்கு பாட அறிவாக இருத்தல் கூடாது. இன்றைய சூழ்நிலையில் ஊடகத்தை அடிப்படையாக கொண்ட சமூக அமைப்பே காணப்படுகின்றது. எதை எடுத்தாலும் ஊடகம் அங்கு தாக்கம் செலுத்துவதை காணக்கூடியதாக உள்ளது. இணையமானது அதிசய மாகும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மத போதகர்கள் போன்றோர் மூலம் இதனை அறிவதை விட, தாமா கவே இதை அறிந்து கொள்வதே சாலச் சிறந்தது. முன்பு ஒரு காலத்தில் வெள்ளையர்கள் எம்மை ஆண்டனர். அப்படியானதொரு சூழல் தற்போது இல்லை. எனினும், அவர்கள் இன்று எம்மை சமூக வளைத்தளங்களை அடிப் படையாக வைத்து ஆள்கின்றனர். இவ்வூடக பயன் பாட்டின் மூலம் ஐரோப்பாவை மையமாகக் கொண்ட மனநிலையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே அவர் களின் நோக்கமாகும்.

உங்கள் மடியில் ஓர் கணனி இருப்பின், அதில் இணைய வசதி காணப்படின் உமக்கு இம்பூமி தொடர்பில் எவ்வித பயமும் தேவையில்லை. உலகத்தின் எம்முனையில் வசிக்கும் ஒருவராக இருப்பினும் வாய்ப்பு கிடைக்கும் போது அவருடன் தொடர்புகளை மேற்கொள்ள வசதி கள் கிடைப்பதாலேயே மனிதன் பயம் கொள்ள தேவை யில்லை என்கின்றோம். இணையத்திற்கு எல்லையில்லை. முன்பு தொடர்பாடல் தொடர்பில் மக்களிடம் இருந்த பார்வை இன்று தொடர்புகளை Connectivity ஏற்படுத்தி கொள்வது தொடர்பில் அமைந்துள்ளது. தொடர்பாடல் என்பது தொழில்நுட்பமாகும். இன்றேல் தொடர்பு தொடர்பானதாகும்.

சமூகத்தில் வாழும் அனைவருக்கும் ஊடகத்தை பயன்படுத்துவது தொடர்பில் இருக்கும் உரிமை உண்டு. அன்று ஊடகங்கள் காவல் நாய்கள் (Watch Dog) என அழைக்கப்பட்டது. அது மனிதனை பாதுகாக்கும் கருவி யாக தொழிற்பட்டது. எனினும் கணனி அறிமுகத்துடன் காவல் நாய்களாக இருந்த ஊடகங்கள், மடிமேல் வைத்து கொஞ்சு குழாவும் செல்ல நாய்களாக மாறிவிட்டன. இதன் மூலம் செல்ல நாய்கள் (Lap Dog) எனும் எண்ணக் கரு தோன்றியது. நாங்கள் எங்கள் தேவைகளையும், விருப் பங்களையும் இவ் மடி கணனிகள் மூலம் மிக இலகுவில் பூர்த்தி செய்து கொள்கின்றோம். அதன் மூலம் இச்செல்ல நாய் எனும் எண்ணக்கரு மாற்றம் கண்டது. இன்று அதற்கு பதிலாக கடிக்கும் நாய் (Attack Dog) எனும் பதம் பிரயோகிக்கப்படுகின்றது.

அன்று எம்மை பாதுகாத்த காவல் நாய் இன்று எம்மை பாதுகாப்பதற்கு பதிலாக கடிக்கவே முயல்கின்றது. இரும்பு துண்டுகள் நிறைந்திருக்கும் பாரிய களஞ்சிய சாலை ஒன்றில் நிறைக்கப்பட்ட துண்டுகளுக்கு முன்னால் ஓர் நாய் இருக்கின்றது. அங்குள்ள இரும்பு துண்டுகள் மூலம் எவ்வித பிரயோசனத்தையும் அடைந்து கொள்வ தில்லை. பிறருக்கு அதனை அடையவும் குறித்த நாய் இடம் கொடுப்பதில்லை. இது போன்றே நாள் முழுவதும் பாரிய கறைகளை உருவாக்கி வரும் தற்கால ஊடக உலகம் இன்று கடிக்கும் நாய்கள் என்ற எண்ணக்கருவிலேயே நோக்கப்படுகின்றன. அதுவே மிகப் பொருத்தமானதும் கூட.

ஆரம்ப காலத்தில் ஊடகமானது ஒருவரிடமிருந்து பலருக்கு (One to Many) தகவல்களை பரிமாறும் தொடர்



பாடலை மேற்கொண்டது. எனினும் இன்று பலரிட மிருந்து இன்னும் பலருக்கு (Many to Many) தகவல்கள் அடித்துக் கொண்டு செல்கின்றது. அதனை சரியாக புரிந்து கொள்ளாத மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்போன் றோர் இச்சமூக தளங்களில் இடை நடுவில் போகும் வழி தெரியாது மாட்டிக் கொள்கின்றனர்.

அதே போன்று இன்று பாவனையில் உள்ள ஊடகங் கள் தனியார் மயப்படுத்தப்படுத்தலுடன் கூடிய சாக்க டையாக மாறிவிட்டது. சமூக தளங்களை சரியான முறையில் பயன்படுத்தும் அறிவு மாணவச் சமூகத்திடம் இல்லை என பெற்றோர் நினைக்கின்றனர். எனினும் அது தொடர்பில் தெரியாதவர்கள் வயது வந்தோரே. உலகத் தில் கல்வியல் எண்ணக்கருக்கள் ஆயிரமாயிரம் இருக் கின்றன. கணனி ஒன்று இருக்குமானால் அதனை வீட்டுக் கதவின் பால் திருப்பி வையுங்கள். இன்றேல் அதனை தம் பிள்ளைகள் பயன்படுத்தும் விதம் தொடர்பில் பெற்றோருக்கு அறிந்து கொள்ள முடியாது.

இந்நவீன யுகத்தில் கல்வி, சமயம், கலாசாரம் என் பன இணையத்துடன் பின்னிப்பிணைந்தே காணப்படு கின்றன. அது ஒழுக்கவியல் பிரச்சினை அன்று. அதன் மூலம் ஏற்படும் அச்சுறுத்தல்களை தாமாகவே உணர்ந்து கொள்ள வேண்டும். சில மேற்கத்தேய நாடுகள் மற்றும் அமெரிக்க இளைஞர்கள் இன்று முகப்புத்தகம் (Face book) பாவனையினால் அதிகம் துன்புறுகின்றனர். முகப் புத்தகத்தை தடை செய்ய வேண்டும் எனும் வாதங்கள் எழுந்தாலும், அது சாத்தியமற்ற ஒன்றாகவே கணிக்கப் படுகின்றது. அனைத்தையும் தடைசெய்வதன் மூலம் சரியான சமூக உருவாக்கம் நிகழ்கின்றது. எனினும் முகப் புத்தகத்தை அவ்வாறு தடை செய்ய வேண்டியதில்லை. அது போலவே முகப்புத்தகத்தை தடை செய்யாமல் இருப்பதன் மூலம் சமூகத்திற்கு அதீத பலன் கிடைக்கும் என்பதற்கும் இல்லை.

**2011** ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் **1600** பாட சாலைகளுக்கு உரித்தான முகப்புத்தகங்கள் தடை செய் யப்பட்டன. **17** வயது நிரம்பிய யுவதி ஒருவரை இளை ஞர்கள் சிலர் பலாத்காரமாக தாக்கும் ஒளிப்பதிவை முகப்புத்தக கணக்கொன்றில் பதிவேற்றியதன் விளை வாக, குறித்த யுவதியின் உரிமை மீறப்பட்டதுடன் அவ ளது தனித்துவத்துக்கு பங்கமும் ஏற்பட்டமையே இவ் வாறு முகப்புத்தகங்களை தடை செய்ய காரணமாக அமைந்தது. மஹாத்மா காந்தியின் புகைப்படம் தேவை யற்ற முறையில் மாற்றப்பட்டு முகப்புத்தகத்தில் பதிவேற் றப்பட்டமையால் இந்தியாவில் அவ்வாறு முகப்புத்தகம் தடைசெய்யப்பட்டது. முகப்புத்தக தடை தொடர்பில் நம்பிக்கையாக செயற்படுவது சீனா, பாகிஸ்தான் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளாகும்.

சமூக தளங்களில் கருத்து பறிமாற்றமே அதிகமாகவும் பிரதானமாகவும் நிகழ்கின்றது. ஒருவருக்கொருவர் கருத் துக்களை பறிமாற்றிக் கொள்ளும் போது ஏற்படும் முறு கல் நிலை தொடர்பில் இங்கு கலந்து ஆலோசிக்கப்பட வேண்டும்.

அதில் முதலாவது எண்ணங்களுடன் தொடர்புடைய மோதல்களாகும் (Imotional Violance). ஏதாவது ஒரு முறையில் தம்மை ஆத்திரமூட்டும் ஒன்று, தவறான முன்னெடுப்புக்கள், விருப்பமற்ற சொற் பிரயோகம் மூலம் இது நிகழக் கூடும். உடலியல் ரீதியாக நிகழக் கூடிய மோதல்கள் (Physical Violance) அதில் இரண் டாவது இடத்தை வகிக்கின்றது. அது போன்றே சமூக தளங்களின் வாயிலாக பாலியல் மோதல்களும் இடம் பெறுகின்றன (Sexual Violance). அமெரிக்காவில் பெரு கிக் கிடக்கும் இவ்வூடகத்தை பயன்படுத்தும் பத்து பேரில் ஒருவர் தகவல்களை பரிமாறிக் கொள்வதன் ஊடாக, ஊடகம் மற்றும் வேறு சக்திகள் மூலம் பாலி யல் துன்புறுத்தல்களுக்கு ஆளாவதாக தெரிவிக்கப்படு கின்றது.

தொழில்நுட்பம் பயணிக்கும் வேகத்தின் அடிப்ப டையில் இயற்கையில் எதன் மூலமும் அதனை நிறுத்து வது என்பது முடியாத காரியம். அதிவேக பாதைகளில் வீதி விபத்துக்கள் இடம் பெறுகின்றது என்பதற்காக அதிவேக பாதை அமைப்பதை எந்தவொரு அரசாங்க மும் நிறுத்தியதாக சரித்திரம் இல்லை. அதே போன்று விமான போக்குவரத்தின் மூலம் ஏற்படும் விபத்துக்க ளால் விமானத்துக்கு பதிலாக வேறு ஒன்றை கொண்டு வர யாருக்கும் முடியாது. அதனால் ஊடகம் தொடர் பில் நல்ல அறிவு பெற்று கவனமாக அதனை பயன்படுத் துவதே இதனை கட்டுப்படுத்த சிறந்த வழியாகும்.

பாடசாலை பாட விதானங்களில் இரு பிரிவுகளாக தொடர்பாடல் கற்கைகள் உள்வாங்கப்பட வேண்டும். தொடர்பாடல் கற்கைகள் மற்றும் ஊடக பயன்பாடு எனும் அடிப்படையிலேயே இப்பாடவிதானங்கள் ஒவ்வொரு பாடசாலைகளிலும் கற்பிக்கப்பட வேண்டும். அடிப்படைகளை மாத்திரம் கற்றுக் கொடுப்பதுடன் மாத்திரம் நின்று விடாது அதனை பயன்படுத்தும் முறை யினையும் சொல்லிக் கொடுப்பதே இப்பிரச்சினையை தீர்க்க மிகச் சிறந்த வழியாகும். இதன் மூலம் மாணவர்கள் சிறந்த அறிவுடன் அதனை பயன்படுத்த முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

# வயதானவர்களுக்கு ஓய்வு தேவையா?

வாழ்வு எனும் வட்டத்தில் பலதும் கற்றுத் தேர்ந்து ஓய்வு எடுக்கும் பருவமாக முதுமைப் பருவத்தை குறிப்பிடலாம். ஓடி, ஓடி உழைத்தது போதும் என்று ஆகிவிட்ட பருவம். பிள்ளைகள் பெற்று, அவர்களை கரைச் சேர்த்துவிட்டு, ஓய்வெடுக்க ஒதுங்கும் பருவமிது.

நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? அவர்களுக்கு இனி முழு ஓய்வு தேவையா? வீட்டோடு பேசாது கிடந்தால் மகிழ்ச்சியும் நலமான வாழ்வும் கிட்டுமா?


“இல்லை” என்கிறார்கள் சுவீடன் தேசத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள்.

ஆண், பெண் இரு சாராரையும் உள்ளடக்கிய 3,800 பேரை 12 வருடங்களாக அவதானித்த ஆய்வு இது. Swedish School of Sport and Health Sciences: the Karolinska Institute in Stockholm இணைந்து செய்த ஆய்வு இது. அவர்கள் அனைவரும் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள், 1937, 1938 ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்கள்.

அந்த வயதினருக்கும் உடற் பயிற்சி அவசியம். பக்கவாதம், மாரடைப்பு போன்ற பாதிப்புக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பைக் குறைக்க வேண்டுமாயின் அவர்கள் ஏதும் செய்யாது இருக்கக் கூடாது. வீட்டுத் தோட்டத்தில் வேலைசெய்வது, தரையை நீரால் துடைத்து சுத்தம்







செய்வது, கூட்டுவது போன்ற ஏதாவது உடலுழைப் புடன் கூடிய வீட்டு வேலைகளில் தினமும் கட்டாயம் ஈடுபடவேண்டும்.

அவ்வாறு உற்சாகமாக சுறுசுறுப்புடன் சிறுசிறு வேலைகள் என்று செயற்பட்டுக்குக் கொண்டே இருக் கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு எதுவும் நடக் காது. அவர்களுக்கு பக்கவாதம், மாரடைப்புப் போன் றவை வருவதற்கான வாய்ப்பு 27 சதவீதம் குறைவாகும். அவர்கள் எந்தக் காரணத்தினாலாவது மரணமடைவதற் கான சாத்தியம் 30 சதவீதம் குறைவாகும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

எவ்வித வேலையும் செய்யாமல் சும்மா இருந்தால் சுகமாக இருப்பது போலத் தோன்றும். ஆனால் உள்ளார்ந்த நோய் பெருகி மரணம் நெருங்கி வரும். தடுக்கவே உடற் பயிற்சியில் ஈடுபட ஆலோசனை வழங்குகின்றனர் ஆய் வாளர்கள்.

இவ்வாறு சோர்ந்துவிடாது செயற்பட்டுக் கொண்டே இருப்பதால் நன்மைகள் பல உண்டு. அவர்களது வய தைப் பொறுத்தவரையில் முறையான உடற் பயிற்சிகள் செய்வதற்கு எந்தவிதத்திலும் குறைந்தது அல்ல என்கின் றனர் ஆய்வாளர்கள்.

எமது ஆய்வின் பிரகாரம் தினசரி உடற் பயிற்சிகள் செய்வதுடன், சுறுசுறுப்பாக ஏதாவது செய்து கொண்டி ருப்பவர்களுக்கு பக்கவாதம் மாரடைப்புப் போன்றவை வரக்கூடிய சாத்தியங்கள் மேலும் குறைவாகும். என்கி றார் ஆய்வாளரான EKBLOM- ஆச்டு.

தினசரி உடற் பயிற்சியானது எவருக்கும் அவசிய மானதே. வேக நடை, யோகாசனம் சைக்கிள் ஓடுதல், நீச்சல் போன்ற பலவும் நல்லவையே. ஆனால் அவற்றில் நாம் 30 நிமிடங்கள் முதல் 1 மணித்தியாலம் போன்ற குறுகிய நேரம் மட்டுமே செலவழிக்கின்றோம். மிகுதி நேரம் சும்மா இருப்பதைவிட ஏதாவது வேலைகளில்

ஈடுபடவேண்டும். இதனால் உடல் உறுப்புக்கள் அனைத்துமே இயங்கிகொண்டிருக்கும்.


உண்மையில் மனித உடலானது சும்மா இருப்பதற்காக வடிவமைக்கப்பட்டது அல்ல. அது தொடர்ந்து செயற்படுவதற்காகவே உருவமைக்கப்பட்டுள்ளது. எனவே அதை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் முதுகு வலி, முழங்கால் தேய்வு, தசைகள் சுருங்குதல் போன்ற இன்னும் பல இயற்கைத் தேய்மானப் பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்க முடியும்.

பொதுவாக வயதாகும் போது உடலின் செயற்பாடுகள் சற்று குறையவே செய்யும். நடையின் வேகம் குறையும். வேறுவேலைகளும் துரிதமாக நடக்காது. ஆனால் அதற்காக சோர்ந்து முடங்கி விடக் கூடாது.

"கதிரையில் பொதிபோல உட்கார்ந்திருப்பதைவிட வீடு துப்புரவு செய்யும் வேலையின் போது ஆறு மடங்கு அதிகமான கலோரி செலவாகிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

அதிகாலை நித்திரை விட்டு எழுந்தது முதல் இரவு நித்திரைக்கு செல்லும் வரை ஓரிடத்திலேயே அமர்ந்து இருக்காது ஏதாவது வேலைகளைச் செய்து தங்கள் உடலை உறுதியாக வைத்திருக்க வேண்டும்.

இவை எல்லாம் எனக்கு எதற்கு வீடு போ போ, காடு வா வா என்கிற வயது!. என்று சொல்லாதீர்கள். அவ்வாறு எண்ணவும் கூடாது. எந்த வயதானாலும் ஆரோக்கியமாக இருப்பது அவசியம். சுதந்திரமும் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்த முதுமை வாழ்வு வேண்டுமானால் சோர்ந்துவிடல் கூடாது. உற்சாகமும், சுறுசுறுப்பும் என இயங்கிக் கொண்டே இருப்பது எந்த வயதினருக்கும் அவசியமானதே.









**நாம் யுத்த வெற்றியை** அனுஷ்டிக்கவில்லை. சமாதானத்தின் வெற்றியே இது என்று தெரிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் ஆயிரக்கணக்கான தமிழ். முஸ்லிம், சிங்கள மக்களை கொலை செய்த குரூரமான பயங்கரவாதியான பிரபாகரனுக்கு மலர்வளையம் வைக்க சிலர் முயல்கின்றனர் என்று குறிப்பிட்டார்.

ஆனால் புலிகளால் கொல்லப்பட்ட மக்களின் அடக்கஸ்தலங்களையோ, அல்பிரட் துரையப்பா, அமிர்தலிங்கம், நீலன் திருச்செல்வம், ரவிராஜ், கதிர்காமர் போன்றவர்களையோ கௌரவிக்க எவரும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய பிரச்சினையின் போது இணக்கப்பாடு ஏற்படுத்தக் கூடிய சிறந்த இடமான பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் பங்கேற்று தமது கருத்துக்களை முன்வைப்பது சகல கட்சிகளின் பொறுப்பு என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, டயஸ் போராக்களுடன் இணைந்து மீண்டும் பயங்கரவாதத்தை தலைதூக்கவைக்க முயல்வது நாட்டில் வாழும் தமிழ் மக்களுக்கு செய்யும் அநீதியாகும் என்றும் கூறினார்.

5ஆவது வருட வெற்றிவிழா மே மாதம் 18ம் திகதி மாத்தறை கடற்கரை வீதியில் வெகு விமர்சையாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி நேற்றுப் போல இன்றும் நாளையும் எதிர்காலத்திலும் சகல சவால்களுக்கும் தைரியமாக முகம்கொடுத்து அவற்றை வெற்றி கொள்வதாகவும் தெரிவித்தார்.

வெற்றிவிழா நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, தமிழிலும் உரை நிகழ்த்தினார். தொடர்ந்து உரையாற்றிய அவர்.

2009 ஆம் ஆண்டில் இன்று போன்ற ஒரு தினத்திலே இந்த நாடு ஐக்கியப்படுத்தப்பட்டது. ஐந்து வருடங்களுக்கு முன்னர் இன்று போன்ற நாளிலே நாட்டின் ஒவ்வொரு அங்குலமும் தாய்நாட்டுடன் இணைக்கப்பட்டது.

சமாதானம், ஸ்திரத்தன்மை, உண்மையான ஜனநாயகம் என்பன நாட்டுமக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன. இதற்காக அர்ப்பணிப்பு மேற்கொண்டபடையினர் இன்று அணிவகுப்பில் பங்கேற்கின்றனர்.


பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு முப்படையினர், பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், சிவில் பாதுகாப்புப் பிரிவு, புலனாய்வுப் பிரிவு, பொதுமக்கள் ஆகியோரின் பங்களிப்போடும் பௌத்த பிக்குமார், கத்தோலிக்க, முஸ்லிம், இந்துமதத் தலைவர்கள் என சகல தரப்பினரதும் ஆசீர்வாதமும் கிடைத்தது. மத ஸ்தலங்களில் வழிபாடுகளும் நடத்தி தமது பங்களிப்பை வழங்கினர்.

பயங்கரவாதத்தை ஒழித்து சமாதானத்தை நிலைநாட்டுவதற்காக மக்கள் எனக்கு ஆணை வழங்கினர். எந்த

# சமாதானத்தை வெற்றிகொண்ட தினத்தையே
## நாம் இன்று நினைவு கூருகிறோம்











சக்திகளுக்கும் தலைசாய்க்காது முப்படைகளின் தளபதியாகவும் காப்பாளராகவும் இருந்து இறுதிவரை உரிய தலைமைத்துவத்தை வழங்கி மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றினேன். ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல், பிரதேசசபைத் தேர்தல் என சகல தேர்தல்களிலும் மக்கள் ஆணை வழங்கினர். மீண்டும் மீண்டும் மக்கள் தந்த ஆணைப்படி அவர்களின் நம்பிக்கையை நிறைவு செய்து வருகின்றேன். நாட்டுப் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அவற்றுக்கு உகந்த தீர்வு வழங்கப்படும்.

பயங்கரவாதம் நிறைவு செய்யப்படும் வரை காத்திருக்காமல் அபிவிருத்தி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. நாடுபூராவும் நெடுஞ்சாலைகள். காபட் வீதிகள், வைத்தியசாலைகள், புதிய பாடசாலைகள், நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு புதிதாக நகரங்கள் அமைக்கப்பட்டும் வருகின்றன. நாடு மீட்டெடுக்கப்பட்ட நிலையில் இவை யாவும் உங்களுக்குரியவையாகும். தேசம் முகம் கொடுத்த முக்கிமான பிரச்சினைக்கே நாம் தீர்வு கண்டோம். நாட்டில் ஜனநாயகத்தை நிலைநாட்டவும், சுதந்திரத்தை உறுதி செய்யவும் நாம் மேற்கொண்ட நடவடிக்கையை இலகுவாக மதிக்க முடியாது. முதற் தடவையாக பல வருடங்களின் பின்னர் வடபகுதியில் தேர்தல் நடத்தப்பட்டு மக்களின்ஜனநாயகஉரிமைகள்உறுதிப்படுத்தப்பட்டன,

ஊடகங்களுக்கு எந்தவித தணிக்கையும் செய்யப்படவில்லை. யுத்தகளத்திற்கு செல்ல ஊடகங்களுக்கு இடமளித்தோம். ஊடக சுதந்திரம் விஸ்தரிக்கப்பட்டது. அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் கூட நேரடியாக காண்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனநாயகம் குறித்து பேசுபவர்கள் நாடு முன்பிருந்த நிலையைப் பார்க்கவேண்டும். வெளிநாட்டு மக்களுக்கு இலங்கை குறித்து நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. முன்பு 4 இலட்சம் சுற்றுலா பயணிகளே இங்கு வந்தனர் இன்று 14 இலட்சம் பேர் வருகின்றனர்.

இலங்கையில் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதானால் பயங்கரவாதிகளே அது குறித்து முடிவு செய்தனர். ஆனால், தற்பொழுது பொதுநலவாய மாநாட்டை நாம் இங்கு நடத்தியதோடு உலக இளைஞர் மாநாட்டையும் நடத்தியுள்ளோம். சர்வதேச மாநாடுகள் நடத்தும் கேந்திர நிலையமாக இலங்கை மாறியுள்ளது. தேசிய கொடியை மேலே உயர்த்தியது போன்று நாடும் மேலே உயர்த்திவைக்கப்பட்டுள்ளது.

எமக்கு மறைப்பதற்கு எதுவும் கிடையாது. உலகத்திற்கு சகல கதவுகளும் திறந்தே உள்ளன.

சிங்களம், தமிழ், முஸ்லிம் என பல ஆயிரம் மக்களை கொலை செய்து தமிழ் மக்களை பணயக் கைதிகளாக பிடித்த பிரபாகரனுக்கு மலர் வளையம் வைக்க சிலர் முயல்கின்றனர்.

ஆனால், பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட ஆயிரக் கணக்கான சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் அடக்கஸ்தலங்களை கௌரவப்படுத்த எவரும் இல்லை. உயிர் தியாகம் செய்தவர்களையே சமாதானத்தை விரும்புவோர்













கௌரவிக்க வேண்டும். பயங்கரவாதிகள் குழுவொன்று நைஜீரியாவில் மாணவர்களை கடத்திய சம்பவம்

உலக ஊடகங்களின் கூடுதல் கவனத்தைப் பெற்றது. ஆனால் 30 வருட யுத்தத்தின் போது பல ஆயிரம் சிறுவர்களை புலிகள் படையில் இணைத்தனர். இறுதிக்கட்ட யுத்தத்தின் போது 600க்கும் அதிகமான சிறுவர்கள் சரணடைந்ததோடு, அவர்கள் பெற்றோரிடமும் உறவினர்களிடமும் ஒப்படைக்கப்பட்டனர். அவர்களுக்கு பாடசாலைகளுக்கு செல்ல வசதி அளிக்கப்பட்டது. இது குறித்து சில நாடுகள் ஊமையாக, குருடாக, செவிடாக உள்ளன. நாம் இதனைக் கொண்டாடுவதை அவர்கள் எதிர்க்கின்றனர்.

நாம் யுத்தத்தின் வெற்றியை அனுஷ்டிக்க வில்லை. “இது யுத்த வெற்றியல்ல சமாதானத்தின் வெற்றியே இது பயங்கரவாதத்தை தோற்கடிக்க நாம் வெளிநாடுகளில் இருந்து படையினரை கொண்டுவரவில்லை.

பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட மக்களை எமது படையினரே மீட்டனர். மனிதாபிமான முக்கியத்துவம் அறிந்த மக்கள் என்ற வகையில் இந்த வெற்றியை கொண்டாடுவது எமது பொறுப்பாகும்.

யார் எதிர்த்தாலும் யார் பங்குபற்றா விட்டாலும் நாட்டுக்குரிய இந்த நாள் என்றென்றும் அனுஷ்டிக்கப்பட வேண்டும்..

நாம் வாழும் இந்தக் காலத்தில் சயனைட் வில்லைகள் இல்லை. 30 வருட பயங்கரவாதம் காரணமாக இந்த நாட்டில் அனைவரும் வேதனைப்பட்டனர். முக்கியமாக எமது தமிழ் சகோதர மக்கள் பட்ட கஷ்ட நஷ்டங்கள், வேதனைகள், சோதனைகள் சொல்ல முடியாது.

பயங்கரவாதத்தை மீள தலை தூக்கவைக்கும் முயற்சிக்கு சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாவலன் என்ற வகையில் நான் ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். பயங்கரவாதத்தினால் நாசமடைந்த சகல பகுதிகளையும் முன்னேற்றி வருகின்றோம். தற்பொழுது எங்கும் சென்று வரலாம். அதுதான் சரியான சுதந்திரமாகும்.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் மக்கள் இராணுவத்தில் இணைந்து வருகின்றனர். பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு கொலை செய்து வெளிநாடுகளுக்கு சென்றவர்களும் புலிகளுக்கு பயந்து இலங்கையை விட்டு சென்றவர்களும் டயஸ் போராக்களுடன் இணைந்து பயங்கரவாதத்தை மீண்டும் தலை தூக்கவைக்க முயல்கின்றனர். சிறு குழுவுக்குக் கிடைக்கும் டொலர்களுக்காக நாட்டுக்கு பெரும் அநீதி செய்கின்றனர்.

பாராளுமன்ற தெரிவுக் குழுவொன்றை நியமித்துள்ளோம். தேசிய பிரச்சினையின் போது இணக்கப்பாடு ஏற்படுத்தக் கூடிய சிறந்த இடம் இது. இங்கு வந்து தமது கருத்துக்களை முன்வைப்பது சகல கட்சிகளினதும் பொறுப்பாகும்.

முன்னர் வடபகுதி மக்கள் பாதுகாப்புதேடி தென்பகுதிக்கு வந்தனர். இன்றும் அவர்களில் பலர் தெற்கில் வாழ்கின்றனர். 58 வீதமான தமிழ் மக்கள் வடக்கிற்கு வெளியிலே வாழ்கின்றனர்.

தெற்கில் இருந்து வடக்கிற்கும் வடக்கிலிருந்து தெற்கிற்கும் மக்கள் சென்றுவருவது வருடாந்தம் நாளாந்தம் அதிகரித்து வருகிறது. புதிய நாடொன்று கட்டியெழுப்பப்படுகிறது.

உயிர் தியாகம் செய்து பெற்ற வெற்றியை பாதுகாப்பதன் மூலமே நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த படைவீரர்களுக்கு உரிய கௌரவம் வழங்க முடியும்.

பிரிக்க முடியாத நாடொன்றைக் கட்டியெழுப்புவதற்காகத்தான் அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்தனர். நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்து பெற்ற சுதந்திரத்தில் ஒரு துளியைக் கூட விட்டுக் கொடுக்காமல் இந்த தாய் நாட்டில் வாழ உறுதி பூணுவோம் என்றார்.









# கித்துளக வருண

## கண்காட்சியும் விற்பனை சந்தையும்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சானது பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திற்கு முன் பாக அமைந்துள்ள சுதர்ஷி சிங்கள கலாசார நிலையத் தில் ஏப்ரல் மாதம் 4 ஆந் திகதி முதல் 6 ஆந் திகதி வரை கித்துளக வருண கண்காட்சியையும் விற்பனை சந்தையை யும் நடத்தியது.

இது நாட்டின் கித்துள் உற்பத்திப் பொருட்களைப் பிரபல்யப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கில் ஒவ்வொரு வருடமும் சிங்கள தமிழ் புத்தாண்டுக்கு முன்னர், நடாத் தப்படும் ஒரு வருடாந்த கண்காட்சியும், விற்பனை சந்தை யுமாகும். இதற்காக நுழைவுக்கட்டணம் எதுவும் அறவி டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 03 நாட்கள் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, தனது அமுலாக் கல் நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்திச் சபையு டன் இணைந்து கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவ னம், தேசிய பொறியியல் ஆராய்ச்சி நிலையம், இலங்கை தரப்படுத்தல் நிறுவனம், ஏற்றுமதி விவசாயத் திணைக் களம், வனப் பாதுகாப்புத் திணைக்களம், ஏற்றுமதி அபி விருத்தி சபை என்பன போன்ற ஆர்வலர்களின் பங்கேற் புடன் ஏற்பாடு செய்யப்படுள்ளமை விசேட அம்சமாகும்.

தரம்வாய்ந்த கித்துள் உற்பத்திகளைக் காட்சிப்படுத் துவதற்காகவும், கித்துள் உற்பத்தியாளர்களுக்கு தங்க ளது உற்பத்திப் பொருட்களை நுகர்வோருக்கு நேரடி யாக விற்பனை செய்வதற்கான சந்தை வாய்ப்புக்களை வழங்குவதற்காகவும் ஐம்பது (50) காட்சிக் கூடங்கள் நிறுவப்பட்டு வெற்றிகரமாக இக் கண்காட்சி நடை பெற்றது. உற்பத்தியாளர்கள் கித்துள் பாணி, கித்துள் கருப்பட்டி, கித்துள் மா, கித்துளை அடிப்படையாகக் கொண்ட புடிங், ஹலப, தலப, கித்துள் மாகஞ்சி போன்ற உணவு மற்றும் பான வகைகளையும் கைப்பணிப் பொருட் கள், பலகைவகைகள் மற்றும் தளபாடங்கள் போன்ற வற்றையும் காட்சிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்க விசேட அம்சமாகும். கண்காட்சியில் பங்குபற்றுபவர்கள் மத்தியில் இருந்து உயர் தரத்திலான கித்துள் உற்பத் திப் பொருட்களையும், உற்பத்தியாளர்களையும் தெரிவு செய்து பாராட்டி ஊக்குவிப்பதற்காகவும் உயர் தரத்தி லான பொருட்களை உற்பத்தி செய்வதற்காகக் கூட்டாக உழைப்பதற்காகவும் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப் பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

### கித்துள் ஊக்குவிப்பு மற்றும் நுகர்வோர் வாரத்தைப் பிரகடனப்படுத்தல்

கித்துளக வருண கண்காட்சி மற்றும் வர்த்தகச் சந்தை யுடன் இணைந்த வகையில் 2014 ஏப்ரல் முதல் வாரத்தை (ஏப்ரல் 1 ஆந் திகதி முதல் 6 ஆந் திகதிவரை) கித்துள் ஊக்குவிப்பு மற்றும் நுகர்வு வாரமாக, அமைச்சரவைத் தீர்மானத்தின் அடிப்படையில் அரசினால் பிரகடனப் படுத்தப்பட்டது. மாவட்ட மட்டத்தில் அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும், கித்துள் உற்பத்தியா ளர்களுக்கு கித்துள் கன்றுகளைப் பகிர்ந்தளிப்பதற்கும், கித்துள் உற்பத்திகளின் போசாக்கு, மருத்துவ மற்றும் சுகாதாரப் பெறுமானங்கள் தொடர்பில் பாடசாலைப்




பிள்ளைகள் மத்தியிலும் பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், உல்லாசப் பயணிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் கித்துள் உற்பத்திப் பொருட்களின் பாவனையையும் நுகர்வினையும் அதிகரிப்பதற்கும், கித்துள் உற்பத்தித் துறையைப் பிரபல்யப்படுத்தி ஊக்குவிப்பதற்காகவும் ஏனைய தொடர்புடைய நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் இவ்வாரம் முழுமையாக பயன்படுத்தப்பட்டது. இதன் மூலம் சிறந்த பயனும் அடையப் பெற்றுள்ளது.

தற்போது 20 சதவீதமான கித்துள் மரங்களிலேயே கித்துள் சாறு இறக்கப்படுகின்றது

ஆயிரம் வருடங்களுக்குமேல் பழைமை வாய்ந்ததும், பரம்பரை பரம்பரையாகக் கைமாற்றப்பட்டு வருவது மான பாரம்பரிய கித்துள் கைத்தொழிலுக்கும் அது தொடர்பான பாரம்பரிய நுட்பங்களை வளர்ப்பதற்கும் உதவிகளை வழங்கிப் பலப்படுத்தி, கித்துள் துறையை மேம்படுத்தி வெளிநாட்டுச் செலவாணி உழைக்கக்கூடியதாக மாற்றியமைப்பது காலத்தின் தேவையாகும்.

மஹிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு தேசிய அபிவிருத்தி உபாயம் பிரகடனம், கிராமியத் துறையில் வாழ்வாதார அபிவிருத்தி, சுய தொழில், வருமான அதிகரிப்பு, வறுமைக் குறைப்பு என்பவற்றுக்கான ஒரு கிராமியப் பொருளாதார அபிவிருத்தி உபாயமாகவும் அந்நியச் செலாவணி கிராமங்களுக்கு நேரடியாக உட்பாய்ச்சுவதற்கான ஒரு ஊடகமாகவும் கித்துள் உற்பத்தித் துறை அடையாளம் காணப்பட்டுள்ளது.



இரத்தினபுரி, கண்டி, பதுளை, மொனராகலை, மாத்தறை, கேகாலை, நுவரெலியா, களுத்துறை, காலி, குருநாகல், மாத்தளை, அம்பாந்தோட்டை, கொழும்பு, கம்பஹா, அம்பாறை, அநுராதபுரம், பொலன்னறுவை, மற்றும் புத்தளம் ஆகிய 18 மாவட்டங்களில் சுமார் 3 மில்லியன் கித்துள் மரங்கள் காணப்படுவதாக பாரம்பரிய தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு, சனத்தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரவியல் திணைக்களத்துடன் இணைந்து நடாத்திய ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. தற்போது இந்த 18 மாவட்டங்களிலும் கித்துள் சாற்றை பெறும் 35,000 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ளனர். இம்மாவட்டங்களிலுள்ள 3 மில்லியன் மரங்களில், சுமார் 600,000 மரங்கள் முதிர்ச்சியடைந்த மரங்களாகவுள்ளன. அவற்றில் சுமார் 120,000 மரங்களில் மாத்திரமே கித்துள் சாறு எடுக்கப்பட்டுகின்றது. இது சுமார் 20 சதவீதமாகும். அதனால் மீதமுள்ள மரங்களில் சாறு எடுக்கக் கூடியவாறு இத்தொழிலானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது.

ஏற்றுமதி வாய்ப்புக்களைக் கொண்டுள்ள போசாக்கு உணவுகள்

மறுபுறத்தில் கித்துள் பாணி, கருப்பட்டி என்பன போசாக்குள்ள ஆரோக்கியமான உணவுகள் எனக் கண்டறியப்பட்டுள்ளதுடன் குறைந்த குளுக்கோஸ் பெறுமானத்தைக் கொண்ட இனிப்பூட்டும் பதார்த்தங்களில் ஒன்று எனவும் நம்பப்படுகின்றது. அதனால், அது குருதியிலுள்ள சீனியின் அளவின் மீது தாக்கம் செலுத்தமாட்டாது என்று கூறப்படுகின்றது. அதனால், நீரிழிவு நோயாளர்களுக்கு உகந்த இனிப்பூட்டும் பதார்த்தமாக தூய கித்துள் கருதப்பட்டு நம்பப்படுகின்றது.



கித்துள் உற்பத்திப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிகூடிய சந்தை வாய்ப்புக்கள் காணப்படுவதை துரிதமாக அதிகரித்து வரும் ஏற்றுமதி வருமானங்கள் சுட்டிக்காட்டுகின்றன. கித்துள் பாணி மற்றும் கருப்பட்டி என்பவற்றின் ஏற்றுமதியின் மூலமான வருமானங்கள் 2011 ஆம் ஆண்டில் 26 மில்லியன் ரூபாவாகவும், 2012 ஆம் ஆண்டில் 58 மில்லியன் ரூபாவாகவும், 2013 ஆம் ஆண்டில் 68 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டன. ஜப்பான், மலேசியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற சர்வதேச சந்தைகளில் இலங்கையின் கித்துள் உற்பத்திப் பொருட்களுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. இலங்கையின் கித்துள் உற்பத்திப் பொருட்கள் பிரித்தானியா, பெல்ஜியம், ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து மற்றும் பல்வேறு ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதாக வரலாற்று சான்றுகள் கூறுகின்றன.

கித்துள் மரத்தில் கித்துள் சாற்றை பெறுவதற்கு அனுமதிப் பத்திரம் தேவையில்லை

விசேட அனுமதிப் பத்திரங்களை எடுக்காது கித்துள் மரங்களில் கித்துள் சாற்றை பெறுவதற்கு அனுமதி வழங்கக்கூடியவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இத்தடைகள் நீக்கப்பட்டமை தொடர்பில் பரந்தளவில் அறிவிக்கப்பட்டு அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் அறிவூட்டப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனை - எதிர்கால நோக்கு கொள்கைப் பிரகடனத்தின் கீழ், இத்துறையை வர்த்தக ரீதியில் இலாபம் தரக்கூடிய ஒரு துறையாகப் பலப்படுத்துவதற்காக, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு தேசிய கித்துள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஒரு தனி கித்துள் பூவிலிருந்து மாதாந்தம் சராசரியாக ரூபா. 15,000 முதல் 20,000 ரூபாவரையான வருமானம் பெறப்படுகின்றது. மேலும், இது சீனியின் இறக்குமதியைக் குறைப்பதில் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்கின்றது. இதன் மூலம் அந்நியச் செலவாணி சேமிக்கப்படுகின்றது. அத்துடன் சர்வதேச சந்தையில் ஒரு ஆரோக்கியமான சுவையூட்டியாகவும் காணப்படுகின்றது.

தேசிய கித்துள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் : கிராமிய பொருளாதார அபிவிருத்தி உபாயம்

அதி மேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தனது 2013 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன் மொழிவுகளில் சப்ரகமுவ மாகாணத்தில் கித்துள் தொழிலை அபிவிருத்தி செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். இதனைப் பாரம்பரியக் கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி

அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார். இத்துறையை ஊக்குவிப்பதற்காக தேசிய கித்துள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் உபாய முறைகளை கொண்டுள்ளது.

1. கித்துள் சாற்றை பெற்றுக் கொள்ளும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும், இளம் சந்ததியினருக்கு சாறு எடுக்கும் திறன்களை வழங்குவதற்காகவும், சாறு எடுக்கும் தொழிலாளர்களின் பயிற்சி நிகழ்ச்சிகளையும் பயிற்றுவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்துதல்.
2. கித்துள் சாறு எடுக்கும் தொழிலாளர்களுக்குப் பாது காப்புக் கருவிகளை வழங்குதலும் (பாதுகாப்பான மேற்சட்டை, தலைக்கவசம், இடுப்புப் பட்டி, கத்தி போன்றவை) மற்றும் கித்துள் மரங்களில் ஏறுவதுடன் தொடர்புடைய வகையில் ஏற்படக் கூடிய அச்சுறுத்தல்கள் போன்ற இழப்பு அபாயங்களைத் தணிப்பதற்குமான காப்புறுதித் திட்டங்களை அறிமுகஞ் செய்தலும்.
3. கித்துள் சாற்றின் விளைவினை அதிகரிப்பதற்காக கெஸ்பர் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தலும் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாத மரங்களை சாறு எடுக்கும் செயன் முறைக்கு உட்படுத்தி கித்துள் சாற்றின் விளைவை அதிகரித்தலும்.
4. கனடாவின் மெப்ல் சிரப் போன்ற ஏனைய சுவையூட்டிகளுடன் போட்டி போடக்கூடியவாறு கித்துள் பாணி மற்றும் கித்துள் கருப்பட்டி என்பவற்றின் தரத்தை மேம்படுத்துதல் GMP, SLS சான்றிதழ்கள், செலவு குறைந்த அடுப்புக்கள், பிரிக்ஸ் மீற்றர்கள், PH மீற்றர்கள், கலப்பட மட்டத்தை மதிப்பிடும் கருவிகள் போன்றவற்றின் மூலம் உயர்வான தரமுடைய உற்பத்திகளை மேம்படுத்தல்.
5. கித்துள் உற்பத்தியாளர்களை அறிந்து கொள்வதற்காகவும் சட்ட ரீதியான இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்காகவும் கித்துள் உற்பத்தியாளர்களைப் பதிவு செய்து அடையாள அட்டைகளை வழங்குதல்.
6. மீள் கொள்வனவு ஏற்பாடுகள், கித்துள் உற்பத்திப் பொருட்களை கோப் சிட்டிகளிலும் நவீன சந்தைகளிலும் விற்பனைக்கு வைத்தல், தனியார் துறையினருக்கு அதிகாரமளித்து உயர் தரத்திலான கித்துள் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் முன்னோடி விற்பனைநிலையங்களைநிறுவுதல்என்பனஉள்ளிட்ட வகையில் கித்துள் உற்பத்தியாளர்களுக்கும், பாரியளவிலான ஏற்றுமதியாளர்களுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
7. நாட்டில் கித்துள் மரங்களின் எண்ணிக்கையை அதிகரித்து அவற்றை வர்த்தக ரீதியான தொழிற்பாடாக மாற்றுவதற்காக நாற்று மேடைகளையும் கித்துள் தோட்டங்களையும் அபிவிருத்தி செய்தல்.
8. கித்துள் மரங்களில் ஏறும் போது ஏற்படும் இழப்பு அபாயங்களை குறைப்பதற்காக பயன்படுத்துநர் நட்புறவான கித்துள் சாறு இறக்கல் முறையொன்றை உருவாக்குதல் - கித்துள் மரங்களில் ஏறுவதற்குப் பொருத்தமான ஏணிகளை உருவாக்குதல்.
9. கித்துளை அடிப்படையாகக் கொண்ட பெறுமதி சேர்க்கப்பட்ட உணவு மற்றும் பான வகைகளின் உற்பத்திகளை ஊக்குவித்து, அவற்றை செய்துகாட்டி, தூண்டுதல் வழங்குதல்.
10. கித்துள் உற்பத்திப் பொருட்களை, அவற்றின் மருத்துவ மற்றும் போசணை உள்ளடக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் மூலம் ஒரு போசாக்குமிக்க, ஆரோக்கியமான உணவாக அறிமுகம் செய்தல். கித்துள் உற்பத்திப் பொருட்களின் போசணை பற்றிய விபரங்கள் அடங்கிய லேபல்களைப் பதித்தல்.
11. சாராயம் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக கித்துள் பாணியையும் கருப்பட்டியையும் உற்பத்தி செய்வதைச் சாத்தியப்படுத்துவதற்காக, கித்துள் சாற்றை புளிப்படைவதிலிருந்து பாதுகாத்தல். பொருத்தமான பொதியிடலின் மூலம் கருப்பட்டி கசிவதைத் தடுத்தல்.

கிராமிய பொருளாதாரத்திற்குப் பயனளிக்கும் வகையில் கித்துள் உற்பத்தித் துறையை ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட ஒரு துறையாக அபிவிருத்தி செய்வதில் அதி கூடிய முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்.












## கிழக்குப் பல்கலைக் கழகத்தில் 555 செலவில் நிருமானிக்கப்பட்ட கட்டிடத் தொகுதி ஜனாதிபதியினால் திறந்துவைப்பு

## தென்கிழக்கு பல்கலையில் இரு கட்டடங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ! திறந்து வைத்தார்











# உயிரிழந்த வீரர்களுக்கு ஜனாதிபதி மலர் அஞ்சலி







